# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1638 - 2010 ජනවාරි 22 වැනි සිකුරාදා - 2010.01.22

*1638 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV(அ) – மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 252 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் – வெற்றிடம் | - | | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, சனவரி மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, சனவரி மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# மாகாண சபை அறிவித்தல்கள்

**கேகாலை நகர சபை**

துணை விதிகள்

*255 ஆம் அத்தியாயமான நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 153 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய மேற்கூறிய கட்டளைச்சட்டத்தின் 94 ஆம் பிரிவின்/157 ஆம் பிரிவின் கீழ் நகர சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்கீழ் கேகாலை நகர சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய மேற்கூறிய நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 154 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் மஹீபால ஹேரத் ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பது இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதி தொடக்கம் மேற்கூறிய துணைவிதிகள் கேகாலை நகரசபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் செயற்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*மஹீபால ஹேரத்,*
*உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர்,*
*சப்பிரகமுவ மாகாணம்.*

*சப்பிரகமுவ மாகாண சபை,*
*புதிய நகரம்,*
*இரத்தினபுரி,*
*2009.12.18.*

**விளம்பர அறிவித்தல்களை ஒழுங்குபடுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான துணைச்சட்டம்**

*1. கேகாலைப் பட்டினசபை எல்லைக்குள் காட்சிக்கு வைக்கப்படுகின்ற விளம்பர அறிவித்தல்களை ஒழுங்குபடுத்துவதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் விதிக்கப்படுகின்ற இத்துணைச்சட்டம் "கேகாலை நகரசபையின் விளம்பர அறிவித்தல் துணைச்சட்டம்" என அறிமுகப்படுத்தப்படுகின்றது.*

*2. 1963 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதி 13570 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்ட கேகாலைப் பட்டின சபை விளம்பர அறிவித்தல் சம்பந்தப்பட்ட துணைச்சட்டம், இத்துணைச்சட்டம் அமுலுக்கு வரும் நாள் முதல் இரத்தாகும்.*

*3. எவரேனும் ஒரு நபரினால் பட்டின சபை எல்லைக்குள் நகர சபைத் தலைவரின் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் எந்தவொரு விளம்பர அறிவித்தலையும் காட்சிக்கு வைக்க அல்லது காட்சிக்கு வைக்குமாறு தூண்டவோ கூடாது. அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொள்ள விரும்பும் எல்லா விண்ணப்பதாரர்களும்.-*

(i) *பட்டினசபயினால் வழங்கப்படும் குறிப்பிட்ட விண்ணப்பப்பத்திரத்தின் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். (இத்துணைச் சட்டத்தின் முதலாவது பிரிவில் கூறப்படும் படிவத்துக்கு அமையவாகும்) :*

(ii) *அவ்விண்ணப்பப்படிவம் விளம்பர அறிவித்தலை காட்சிக்கு வைக்க அல்லது விளம்பர அறிவித்தல்படுத்த 07 நாட்களுக்கு முன் சமர்ப்பிக்க வேண்டும். எனினும் விசேட காரணம் ஒன்றிற்காக தலைவரின் விருப்பத்துக்கு அமைய இந்நீதி மாற்றியமைக்கப்படலாம்:*

(iii) *எல்லா விண்ணப்பப்பத்திரங்களுடனும் கீழ்க் குறிப்பிடப்படும் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் :-*

- *(அ) விளம்பர அறிவித்தல் அல்லது விளம்பரப்பலகை வைக்கப்படும் இடம், நிலத்தின் உரிமையாளரின் விருப்பத்தை வெளிப்படுத்தும் கடிதம் ;*
- *(ஆ) நிலத்தின் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக பட்டின சபையினால் வழங்கப்படும் உறுதிப்பத்திரம் ;*
- *(இ) விளம்பர அறிவித்தலுக்கு நிச்சயமான ஒரு பட்டியல் இருக்குமானால், அதற்கான பொருட்கள், நீலம், அகலம், நிலத்திலிருந்து உயரம் போன்ற அளவுகளைக் குறிப்பிட்ட திட்டம் ;*
- *(ஈ) விளம்பரம் செய்யும் அறிவித்தலுக்கு பொருத்தமான வசனம், வரைபு, நிறம், நீளம், உயரம் குறிப்பிட்ட பட்டியல் ;*
- *(உ) விளம்பர அறிவித்தலில் குறிப்பிடப்படும் காரணங்கள் உண்மை என்பதை அத்தாட்சிப்படுத்துவதற்காக பட்டினசபையினால் வேண்டப்படும் பத்திரங்கள்.*

*4. மூன்றாம் துணைச்சட்டத்தின் கீழ் தலைவரினால் விண்ணப்பப்பத்திரமொன்று அனுமதிக்கப்படும் வேளையில் இத்துணைச் சட்டத்தின் 3 ஆம் உப பிரிவில் குறிப்பிடப்படும் கட்டணத்தை விண்ணப்பதாரியினால் சபைக்குச் செலுத்தி பற்றுச்சீட்டொன்றை பெற்றுக்கொள்ளுமாறு தலைவரினால் கூறப்படவேண்டும். காலத்துக்குக் காலம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு தீர்மானிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரித்து இக்கட்டணத்தை திருத்தியமைக்க சபைக்கு அதிகாரம் உண்டு.*

*5. விண்ணப்பதாரியின் பெயரையும் முகவரியையும் இலகுவாக வாசிக்கக்கூடிய முறையில் தெளிவான எழுத்தில் அவ்வறிவித்தல் பலகையில் அல்லது விளம்பரப்படுத்தும் பட்டியலில் அல்லது முன்னால் நன்றாக கண்ணுக்குத் தெரியும் இடத்தில் காண்பிக்க வேண்டும்.*

6. யாரேனும் ஒரு நபருக்கு விளம்பர அறிவித்தலுக்காக அனுமதிப்பத்திரம் வழங்கும்போது தலைவரினால் அந்நபருக்கு-

(i) அவ்விளம்பர அறிவித்தலில் எல்லாப் பிரதிகளிலும் அதற்காக வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியையும். இலக்கத்தையும் குறிப்பிடுமாறு ; அல்லது.

(ii) அவ்விளம்பர அறிவித்தலில் எல்லாப் பிரதிகளிலும் அவ்வறிவித்தலுக்கான அனுமதிக் கட்டணம் செலுத்தப்பட்டிருப்பதை உறுதிப்படுத்துவதற்காக இறப்பர் முத்திரை இடுமாறு
தலைவரிடம் கேட்க இடமளிக்க வேண்டும்.

7. யாதாவது ஒரு விளம்பர அறிவித்தலைக் காட்சிக்கு வைப்பதற்காக அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தியதை உறுதிப்படுத்துவதற்கு தலைவரினால் அவ்வறிவித்தலில் வைக்கப்படும் ஏதாவது ஒரு முத்திரை, இலட்சனம், எழுத்து ஒன்று, வசனமொன்று, வரைபு ஒன்றை மாற்றியமைக்கவோ, மாற்றியமைக்க இடமளிக்கவோ முடியாது.

8. (i) ஏதாவது ஒரு விளம்பர அறிவித்தலில் வர்ணம் மாறிவிட்டால் அல்லது அலங்கோலமாகிவிட்டால், பட்டின சபை மூலம் அறிவிக்கப்படும் எழுத்து மூல அறிவித்தலினால் அனுமதிப்பத்திரத்தின் கால எல்லை முடிவடைய முன் அவ்விளம்பர அறிவித்தலை காட்சிக்கு வைப்பதை நிறுத்த முடியும்.

(ii) இத்துணைச் சட்டத்தின் 1 ஆம் பந்தியின் கீழ் நகரசபையால் வெளியிடப்படும் அறிவிப்பொன்றைப் பெற்றுக்கொள்ளும் ஒருவரினால் அதில் குறிப்பிடப்பட்ட காலஎல்லைக்குள் அவ்வறிவித்தலுக்கு இணங்க செயற்படல் வேண்டும்.

9. இரண்டாவது உப பிரிவில் காட்டும் விளம்பர அறிவித்தல் எதுவும் இத்துணைச்சட்டத்தின்கீழ் அனுமதிப்பத்திரமொன்று பெற்றுக்கொள்வதற்கு அவசியமற்றதாகும்.

10. ஏதாவது ஒன்றைப் புகைத்தல் அல்லது போதைவகை விளம்பர அறிவித்தல் பலகையில், தாப்பையில், சுவரில் ஒட்டுவதையோ, காட்சிக்கு வைப்பதையோ தவிர்த்துக்கொள்ளல் வேண்டும்.

11. இத்துணைச் சட்டத்தில் குறிப்பிடப்படும் ஏதாவது ஒன்றை மீறினால் அல்லது அதனை செய்யாது தவிர்த்துக் கொள்ளல் குற்றவாளியாவதுடன் யாராவது ஒரு நபர் தகுந்த அதிகாரமுள்ள நீதிமன்றம் ஒன்றால் குற்றவாளியாக்கப்பட்ட பின்பும் தொடர்ந்து அம்மீறலை செய்து வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் 1939 ஆம் ஆண்டு 61 ஆம் இலக்க நகரசபைச் சட்டத்தின் 153 (2) உப பந்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும் தண்டத்திற்கு உற்படுதல் வேண்டும்.

12. (அ) எந்த நபரினாலும்,-

(i) ஏதாவது ஒரு வீதியில் அல்லது அடிப்பாதையில் அல்லது வாகனம் செல்லும் பாதைக்கு மேலாக அல்லது குறுக்காக அல்லது நீண்டிருக்கும் வகையில் விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைத்தல் ;

(ii) நிலத்திலிருந்து 10 மீற்றருக்கு மேலான உயரத்தில் அல்லது குறுக்காக அல்லது நீண்டிருக்கும் வகையில் விளம்பர அறிவித்தலொன்றை காட்சிக்கு வைத்தல் ;

(iii) எவையேனும் ஒரு வீதியில் அல்லது பாதைக்கு முன்னே, அருகில் அமைந்துள்ள கட்டிடத்தின் முகப்பிற்கு அல்லது வியாபார நிலையத்தின் பெயர்ப்பலகையில் அல்லது அக்கட்டிடத்தின் முகப்பின் எல்லையைத் தாண்டிச் செல்லும் வகையில் விளம்பர அறிவித்தல் ஒன்றைப் பொருத்துவது அல்லது தொங்க விடுவது தனியார் அல்லது பொதுக் கட்டிடத்தில், பொது சமய வழிபாட்டுத் தளத்தில், பொதுப் பூங்காவில் அல்லது ஏதாவது ஒரு பாலத்தில் பாதைசாரிகள் பாவிக்கும் பாலத்தில், தொலைபேசி அல்லது மின்சாரக் கம்பத்தில் அல்லது பாதுகாப்புத் தாப்பை ஒன்றில், போக்கு ஒன்றில், இவுரை ஒன்றில் அல்லது மரம் ஒன்றில் விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.

(ஆ) விளம்பர அறிவித்தலால் உபயோகம் பெறும் உரிமையாளரால் அல்லது குத்தகையாளரினால்.-

(i) குறித்த விளம்பரப பலகையை ஒழுங்காக பழுதுபார்த்து மக்களின் சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் கொண்டு நடத்தல் வேண்டும் ;

(ii) குறித்த விளம்பரம் சகலரும் காணும் வகையிலும், வாசிக்கக்கூடிய வகையிலும் தெளிவாக விளம்பரதாரரின் பெயரும் முகவரியும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) (i) எந்தவொரு நபரினாலும் அனுமதிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் அப்படிவத்தில் இல்லாத எந்தவொரு விளம்பர அறிவித்தலையும் வாகனமொன்றில் காட்சிக்கு வைக்க இடமளிக்க முடியாது ;

(ii) பொலிஸ் அதிகாரியினால் அனுமதிக்கப்பட்டுள்ள விளம்பர அறிவித்தல் அல்லாத வேறு எந்த விளம்பர அறிவித்தலுடன் கூடிய வாகனங்கள் எவற்றையும் ஒரு வீதியில் அல்லது பாதையில் ஓட்டுதல் கூடாது.

13. அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொள்ளாமல் பட்டின சபை எல்லைக்குள் காட்சிக்கு வைக்கப்படும் (இரண்டாவது அட்டவணையில் காட்டும் விளம்பர அறிவித்தல்கள் தவிர்ந்த) எல்லா விளம்பர அறிவித்தல்கள் சம்பந்தமாக நீதிக்கு உட்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரம் சபைக்கே உரியதாகும். விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைக்க அனுமதி பெற்ற பின்னர் அனுமதிப் பத்திரம் காலாவதியாவதற்கு முன் ஏதாவது ஒரு முறையில் செதுக்கப்பட்ட ஒரு சுவரிலோ அல்லது தடுப்பு சுவரிலோ வரையப்பட்ட அல்லது வைக்கப்பட்ட அறிவிப்புப் பலகை ஒன்று, துண்டுப் பிரசுரமொன்று, விளம்பர அறிவித்தலொன்று அல்லது பலகை ஒன்று காற்றின் காரணமாக ஒட்டப்பட்டு அல்லது கழன்று அல்லது நிலத்தில் விழுந்து பட்டினத்தின் அழகுக்கு எந்த வகையிலாவது குந்தகம் விளைவுக்குமானால் அவ்வாறான அறிவித்தல்களை காட்சிக்கு வைப்பவரினால் நல்ல முறையில் ஒழுங்குபடுத்தாவிட்டால் தலைவரினால் அதனை அகற்ற முடியும் (அறிவித்தலை அகற்றுவதற்கு முடியுமானது போலவே அவ்வறிவித்தல் பற்றிய எந்தவித உத்தரவாதம் சொல்லவோ அல்லது நஷ்டஈடு வழங்கவோ சபை அல்லது தலைவர் பொறுப்பில்லை).

14. பதவிளக்கம் சம்பந்தமாக வரைவிலக்கணம் தேவைப்பட்டால் இத்துணைச் சட்டத்தில் "தலைவர் என்பதன் பொருள்" கேகாலை நகரசபைத் தலைவர் எனவும், "செயலாளர்" என்பதன் பொருள் கேகாலை நகரசபைச் செயலாளர் எனவும், "அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பதன் பொருள் கேகாலை நகரசபைத் தலைவரின் எழுத்துமூல அதிகாரம்பெற்ற அலுவலர் என்பதாகும்.

"அறிவித்தல் பலகை" என்பதன் பொருள் ஒரு பொது இடத்தில், ஒரு கம்பம், ஒரு பலகை, ஒரு பொருட்காட்சிப் பலகை, விளம்பர அறிவித்தலை காட்சிக்கு வைப்பதற்காக உபயோகிக்கப்படும் வேறு ஏதாவதொரு செயல்முறை என பொருள்படும். மேலும் "வான் பலகை" என்பதன் பொருள் எவையேனும் ஒரு இடத்திற்கு, கட்டிடத்திற்கு அல்லது வேறு எவையேனும் ஒரு பொதுவிடத்திற்கு மேலால் அல்லது அதன் மேல் ஒரு கம்பத்திற்கு, சட்டகவடிவிற்கு அல்லது எவையேனும் ஒரு தூணிற்கு பொருத்தப்பட்டுள்ள அல்லது அதன் மீது வைக்கப்பட்டுள்ள அல்லது எவையேனும் ஒரு வீதியில், பாதையில் அல்லது குளத்தில் ஏதேனும் ஒரு முனையில் இருந்து வானை நோக்கி முழுமையாக அல்லது அரைவாசியாக கண்ணுக்கு தெரியக் கூடியதாக இருக்கும் விளம்பர அறிவித்தல்களாகும். "விளம்பரம்" என்பதன் பொருள் அறிவித்தல்களுக்காக உபயோகிக்கப்படும் ஏதேனும் ஒரு வசனம், எழுத்து, மாதிரி, வடிவம், சின்னம் அல்லது அமைப்பு என்பதாகும்.

15. இத்துணைச் சட்டத்தில் தமிழ் மற்றும் ஆங்கிலப் பிரதிகளில் விளக்கத்தில் ஏதேனும் தெளிவின்மை ஏற்பட்டால் சிங்கள மொழிமூல துணைவிதி செல்லுபடியானதாகும்.

16. இத்துணைச் சட்டம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினம் முதல் அமுலுக்கு வருதல் வேண்டும்.

### 1 - அட்டவணை

01. விண்ணப்பதாரியின் பெயர் :----.

02. முகவரி :----.

03. விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைக்கப்பட விரும்பும் தொழில், கொண்டாட்டம், கண்காட்சி, அலங்காரம், கூட்டம் அல்லது வியாபாரம் பற்றிய விபரம் :----.

04. விளம்பரம் அறிவித்தலை காட்சிக்கு வைக்க எதிர்பார்க்கும் இடம் :----.

05. விளம்பர அறிவித்தலுக்கு அவசியமான காலம் :----.
சம்பந்தப்பட்ட மற்றவர்களின் விருப்பத்தை வெளிப்படுத்தும் கடிதம் இணைக்கப்பட்டுள்ளதா? :----.

06. குறிப்பிட்ட படிவம் இணைக்கப்பட்டுள்ளதா? :----.

07. காட்சிக்கு வைக்க எதிர்பார்க்கும் அறிவித்தல் வகை :----.
(வான்பலகை, பலகை, கட்அவுட், சுவர், தடுப்பு சுவர், அல்லது நிலையான)

08. எவ்வகையிலும் தம் பெயர்ப் பலகையில் விளம்பர அறிவித்தல் காட்சிப்படுத்த அனுமதி பெற்ற பின்பு அவ்வறிவித்தல் நிறம்மாறல், கழன்று விடுதல், ஒட்டுதல், உடைந்து விழுந்தால் நல்ல முறையில் திருத்தி அமைக்க இணங்குகின்றேன்.

09. காட்சிக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கும் கால எல்லை முடிவடைந்தவுடன் தன்னால் அவ்வறிவித்தலை/பலகையை அகற்ற முடியுமா?
(அகற்ற முடியாவிட்டால் சபையினால் அகற்றுவதற்கான கட்டணம் அறவிடப்படும்)

சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதிகளுக்கு இணங்க விளம்பர அறிவித்தல் காட்சிக்கு வைக்க விரும்புவதோடு அது பற்றிய துணைச்சட்டம் அல்லது துணைவிதியை மீறுவது தண்டனை வழங்கக் கூடிய குற்றமாகும் என்பதை நான் நன்கு அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**2 - அட்டவணை**

கீழ்க்காணப்படும் விளம்பர அறிவித்தல்கள் இத்துணைச் சட்டத்தில் அடங்குவதில்லை.

01. (i) சமயமும், சமய வழிபாட்டு ஸ்தலங்களுக்கான அறிவித்தல்
(ii) பாதுகாப்பு சம்பந்தமான அறிவித்தல்.
(iii) அரச பங்களிப்பின்கீழ் செய்யப்படும் எல்லா வேலைகளுக்குமான அறிவித்தல்கள்
(iv) மரண அறிவித்தல், அரசியல் அல்லது மக்கள் கூட்டமொன்று பற்றிய அறிவித்தல்.
(v) தமது வியாபார ஸ்தலத்துக்குள்/அருகே இருக்கும் பெயர்ப்பலகை/பலகையினால் செய்யப்பட்ட பெயர்ப்பலகை
(vi) "கூலிக்கு கொடுக்க உண்டு" என்ற விளம்பர அறிவித்தல்.
(vii) "விற்பனைக்கு உண்டு" என்ற விளம்பர அறிவித்தல்.
(viii) தொழில் சம்பந்தமாக பயன்படுத்தப்படும் சதுர அடி 4 க்கு மேற்படாத விளம்பரப் பலகை.

**3 - அட்டவணை**

| | ஒரு மாத விளம்பரத்துக்காக சதுர அடி ஒன்றுக்கு ரூபா ச. | ஒரு வருட விளம்பரத்துக்காக சதுர அடி ஒன்றுக்கு ரூபா ச. |
|---|---|---|
| 01. அறிவித்தல் பலகை ஒன்று விளம்பரம் செய்வதற்கு (தற்காலிக அறிவித்தல் பலகையும், வான் பலகையும்) | 25 0 | |
| 02. நிலையான விளம்பரம் ஒன்றுக்கு | | 40 0 |
| 03. அறிவித்தல் பலகை ஒன்றுக்கு அல்லது அதற்கு மேற்பட்டவகைளுக்காக 250 ரூபாவை சபையில் நிலையான வைப்பிலிட வேண்டும் | | |
| 04. வான் அறிவித்தல் பலகை 05 அல்லது அதற்கு மேற்பட்டவைகளுக்கு 250 ரூபாவை நிலையான வைப்பிலிட வேண்டும் | | |

1-533

---

## யட்டியாந்தோட்டை பிரதேச சபை

துணை விதிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய அச்சட்டத்தின் 69 ஆம் பிரிவின்/126 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் யட்டியாந்தொட்ட பிரதேச சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய மேற்கூறிய பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் மஹீபால ஹேரத் ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதும் இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதி தொடக்கம் மேற்கூறிய துணைவிதிகள் யட்டியாந்தோட்டை பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் செயற்படும் என்பதும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மஹீபால ஹேரத்,
உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர்,
சப்பிரகமுவ மாகாணம்.

சப்பிரகமுவ மாகாண சபை,
புதிய நகரம்,
இரத்தினபுரி,
2009.12.18.

**கட்டாக்காலி பிராணிகளால் ஏற்படும் சேதங்களை மட்டுப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான உபகட்டளைச் சட்டம் - யட்டியாந்தோட்டை பிரதேசசபை**

1. இவ்வுப கட்டளைச் சட்டமானது யட்டியாந்தோட்டைப் பிரதேச சபை எல்லைக்குள் கட்டாக்காலியாகத் திரியும் பிராணிகளைப் பிடித்தல் அவைகளை நிறுத்திவைத்தல் மற்றும் அவை தொடர்பான வேறு காரணிகளைப் பன்முகப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான கட்டளைச் சட்டமாகும்.

2. யட்டியாந்தோட்டைப் பிரதேச சபை எல்லைக்குள் பொது இடங்களில், வீதிகளில் நடமாடும் மக்களுக்கு மற்றும் வாகனங்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் அப்பிராணிகளைச் சொந்தக்காரர்கள் இடமளிக்கக்கூடாது.

3. யட்டியாந்தோட்டைப் பிரதேச சபைத் தலைவர் அல்லது செயலாளர் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் கட்டாக்காலியாகத் திரியும் பிராணிகளைப் பிடிப்பதற்கும் அவைகளைச் சபை உடமையாக்குவதற்கும் அதிகாரமுள்ளது.

4. அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் தாம் பிடித்த எல்லாப் பிராணிகளையும் உடனடியாகச் சபையால் அமைக்கப்பட்டுள்ள பிராணிகள் காப்பகத்திற்கு ஒப்படைத்து இலக்கம் 01 உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

5. உத்தியோகத்தர்களால் பிடிக்கப்பட்ட பிராணிகள், சபையின் பிராணிகள் காப்பகத்திற்கு ஒப்படைக்கும் போது பிடிக்கப்பட்ட திகதி, நேரம், இடம், பிராணிகளின் வகை ஆண், பெண் பால், பிராணியின் நிறம் மேலும் வேறு விசேட அடையாளங்கள் என்பவற்றைப் பத்திரம் ஒன்றில் தயாரித்து, சபை பிராணிகள் காப்பகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டமையைப் பிராணிகள் காப்பாளர்மூலம் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். அதேநேரம் அவற்றை ஒப்படைத்ததாகத் தாமும் கையொப்பமிடல் வேண்டும். அத்தோடு தயாரிக்கப்பட்ட பத்திரத்தைக் காரியாலய நேரங்களில் சபை செயலாளருக்கு அல்லது அதிகாரம் பெற்ற ஒரு உத்தியோகத்தருக்குச் சமர்ப்பித்து அவரால் கையொப்பம் பெறப்படல் வேண்டும்.

6. பிராணிகள் காப்பகத்திற்குக் கொண்டுவரப்பட்ட பிராணிகள் தொடர்பாகக் காப்பாளர் விபரக்கோவையொன்றை நடைமுறைப்படுத்தல் வேண்டும். பிராணிகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நேரம், திகதி மற்றும் தலைவர் அல்லது செயலாளரால் விடுதலை செய்வதற்கான கட்டளை வழங்கப்பட்ட திகதி, நேரம், பிராணிகள் விடுதலை செய்யப்பட்ட நேரம் போன்றவற்றையும் காப்பாளர் விபரக்கோவையாகத் தயாரித்து வைத்திருத்தல் வேண்டும். அதேபோல் பிராணியைப் பெற்றுக்கொண்டவரும் கையொப்பமிடல் வேண்டும்.

7. சபைத்தலைவரின், செயலாளரின் எழுத்துமூல கட்டளையின்றி எந்தவொரு பிராணியையும் விடுதலை செய்தலாகாது. அதேவேளை கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள நபருக்கு மாத்திரமே பிராணியை ஒப்படைத்தல் வேண்டும்.

8. பிடிக்கப்பட்ட எல்லாப் பிராணிகளையும் பாதுகாப்பதற்கான முறையான இடமொன்றை யட்டியாந்தோட்டைப் பிரதேச சபை ஒதுக்கீடுசெய்து அவற்றுக்கான உணவு, பாதுகாப்பை வழங்குவது சபையின் கடமையாகும்.

9. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் பிடிக்கப்பட்ட பிராணிகள், அவை பிடிக்கப்பட்ட காலம் முதல் விடுதலை செய்யப்படும் காலத்திற்குள் நோய்வாய்ப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது மரணிக்கும் சந்தர்ப்பத்தில் அதற்கான எந்தவொரு பொறுப்பையும் யட்டியாந்தோட்டைப் பிரதேச சபை அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் ஏற்றுக்கொள்ளமாட்டார். அதேநேரம் அவ்வாறான சந்தர்ப்பங்களில் அதற்காக நட்டஈடு வழங்குவதற்குச் சபை அல்லது வேறு அலுவலர், கட்டுப்பாட்டாளர் இதற்கான எந்தவொரு நட்டஈட்டுச் சபையால் அல்லது வேறு அலுவலரால் வழங்கப்படமாட்டாது.

10. பிடிக்கப்படும் எந்தவொரு பிராணிகளாயினும் பிடிப்பதற்கான கட்டணமாக சபையால் மாற்றியமைக்கும் தொகையையும், பிராணிகளைக் காப்பதற்காகச் சபையால் இடைக்கிடை மாற்றியமைக்கப்படும் கட்டணத்தையும் (24 மணித்தியாலத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு) பிராணியின் உரிமையாளர் செலுத்தி உரிமையை உறுதிப்படுத்திய பின்னரே பிராணியை விடுதலை செய்தல் வேண்டும்.

11. உரிமையாளர்கள் இல்லாத பிராணிகள், குறித்த கட்டணம் செலுத்தப்படாத பிராணிகள், பிடிக்கப்பட்ட தினத்திலிருந்து 7 நாட்களுக்குள் காப்பகத்தில் வைக்கப்பட்டிருந்த பிராணிகள் போன்றன சபை உரிமையாக்கப்பட்டுச் சபைத் தலைவர்மூலம் விளம்பரப்படுத்திய பின்னர் பிரசித்திபெற்ற ஏலத்தில் விற்பதற்கும் பிராணியை ஏலத்தில் பெற்றுக்கொண்டவருக்கு அதன் உரிமையை வழங்குவதற்கும் சபைக்கு உரிமையுள்ளது.

12. ஏலத்தில் விற்றுப்பெறப்பட்ட தொகையில் சபைக்குச் சேரவேண்டிய பணத்தை அறவிட்டுக்கொண்ட பின்னர் பிராணியின் உரிமையாளர் பணம் வேண்டும் சந்தர்ப்பத்தில் மீதிப் பணத்தை அவருக்குச் செலுத்துதல் தொடர்பாகச் சபையால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படலாம். ஏலம் விடப்பட்டு 6 மாதங்களின் பின்னர் குறித்த தொகை வழங்கப்படமாட்டாது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் அத்தொகை சபை வைப்பில் இடப்படும்.

13. இவ்வுபகட்டளைச்சட்டத்தின் ஏதாவதொரு சட்டத்தை மீறும் சந்தர்ப்பத்தில் அல்லது இரண்டிற்கும் மேற்பட்ட தடவைகள் தமது பிராணியைக் கட்டாக்காலியாகத் திரியவிடும் சந்தர்ப்பங்களில் அவை பிடிக்கப்படுமானால் அது பாரிய தவறாகும். அதேவேளை பிராணியை விடுதலை செய்யாது அதன் உரிமையாளரை நீதிமன்றம் குற்றவாளியாகக் கருதுமானால் அதன்பின் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122 (2) பிரிவின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்டுள்ள தண்டப்பணத்தை உரிமையாளர் செலுத்துதல் வேண்டும். இத்தவறு தொடர்ச்சியாகச் செய்யப்படுமிடத்து அத்தினங்களுக்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122 (2) பிரிவின்கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள மேலதிக தண்டனைக்கு அவர் கட்டுப்படுதல் வேண்டும்.

14. இவ்வுப கட்டளைச் சட்டத்தின் தமிழ், ஆங்கில பிரசுரிப்புகளில் ஏதாவது கருத்து முரண்பாடுகள் புலப்படுமாயின் அச்சந்தர்ப்பத்தில் இதன் சிங்கள பிரசுரிப்பு செல்லுப்படியானதாக கருதப்படும்.

கருத்துவெளிப்பாடு

* இதில் வரும் சொற்கள் வேறு பொருள்படும் சந்தர்ப்பங்களில் அன்றி இவ்வுபகட்டளைச்சட்டத்தின் 'சபை' எனும்போது யட்டியாந்தோட்டைப் பிரதேச சபையையும்,

* 'தலைவர்' எனும்போது யட்டியாந்தோட்டைப் பிரதேச சபைத் தலைவரையும் 'செயலாளர்' எனும்போது எட்டியாந்தோட்டைப் பிரதேச சபை செயலாளரையும் குறிக்கும்.

* இங்கு 'பிராணி' எனும்போது மாடு, எருமை மாடு, போனி, குதிரை, ஆடு, செம்மறி அல்லது பன்றி போன்றன அடங்கும். இதன் ஒவ்வொரு வகைகளிலும் அவை ஆண், பெண் என வகைப்படுகின்றது. இங்கு ஒருமை, பன்மையை வேறுபடுத்திக் காட்டுதல் அவசியம்.

* பொது இடங்களின்போது யட்டியாந்தோட்டைப் பிரதேச சபை எல்லைக்குள் அமைந்திருக்கும் வீதிகள், பொது பஸ்தரிப்பிடம், வாகனத் தரிப்பிடம், வியாபார நிலையங்கள், பாடசாலைகள், விளையாட்டு மைதானங்கள், பூங்காக்கள், பொதுக்கட்டிடங்கள் மற்றும் மக்கள் நடமாட்டம் நிறைந்த வேறு இடங்களையும் குறிக்கும்.

* கட்டாக்காலிப் பிராணிகள் எனும்போது, பிரதேச சபை எல்லைக்குள் ஏதாவது பொது இடங்களில் கட்டப்பட்டிருக்கும் அல்லது வேறு ஏதாவது வகையிலிருக்கும் சகல பிராணிகளையும் குறிக்கும். அதேவேளை பொருட்கள் ஏற்றுவதற்காக வண்டிகளில் கட்டப்பட்டிருக்கும் மாடுகள், எருதுகள் இவ்வகைக்குள் உட்படாது.

* அதிகாரம் பெற்ற 'உத்தியோகத்தர்' எனும் போது யட்டியாந்தோட்டைப் பிரதேச சபை எல்லைக்குள் கட்டாக்காலியாகத் திரியும் பிராணிகளைப் பிடிப்பதற்கும் அவற்றைப் பிராணிகள் காப்பகத்திற்குக் கொண்டுசென்று ஒப்படைக்கும் சபைத்தலைவரால் எழுத்துமூல அதிகாரம் பெற்ற ஒருவரைக் குறிக்கும்.

* 'பிராணிகள் காப்பகம்' எனும் போது கட்டகாலியாகத் திரியும் பிராணிகளைப் பிடித்து வைப்பதற்காக யட்டியாந்தோட்டைப் பிரதேச சபையால் இடைக்கிடை அமைக்கப்படும், நடைமுறைப்படுத்தப்படும் இடங்களைக் குறிக்கும்.

* 'காப்பாளர்' எனும் போது காப்பகத்தில் நிறுத்திவைக்கும் பிராணிகளை பாதுகாப்பதற்கு மற்றும் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு யட்டியாந்தோட்டைப் பிரதேச சபைத் தலைவரால் எழுத்துமூல அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஒருவரைக் குறிக்கும்.

**அட்டவணை - இல. 1**

**யட்டியாந்தோட்டை பிரதேச சபை**

1. பிடிக்கப்பட்ட பிராணி அல்லது பிராணிகள் பற்றிய விபரம் :----.
2. பிடிக்கப்பட்ட இடம் :----.
3. பிராணியின் வகை மற்றும் தோலின் நிறம் பற்றிய விபரம் :----.
4. காப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்ட திகதி மற்றும் நேரம் :----.

ஒப்படைக்கப்பட்டது :
ஒப்படைத்த நபரின் பெயர் :----.
மற்றும் கையொப்பம் :----.

பெற்றுக்கொள்ளப்பட்டது :
பெயர் மற்றும் கையொப்பம் :----.
காப்பாளர் :----.
பெற்றுக்கொண்டவரின் பெயர் :----.

01-534/1

**யட்டியாந்தோட்டை பிரதேச சபை**

*துணை விதிகள்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய அச்சட்டத்தின் 69 ஆம் பிரிவின்/126 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் யட்டியாந்தொட்ட பிரதேச சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய மேற்கூறிய பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் மஹீபால ஹேரத் ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதும் இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதி தொடக்கம் மேற்கூறிய துணைவிதிகள் யட்டியாந்தோட்டை பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் செயற்படும் என்பதும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*மஹீபால ஹேரத்,*
*உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர்,*
*சப்பிரகமுவ மாகாணம்.*

*சப்பிரகமுவ மாகாண சபை,*
*புதிய நகரம்,*
*இரத்தினபுரி,*
*2009.12.18.*

**பிரதேசசபை எல்லைக்குள் வரி அறவிடுதல் சம்பந்தமாக அவசிய விபரங்கள் மற்றும் முறை விபரங்கள் பெற்றுக்கொள்ளல் பற்றிய உபகட்டளைச்சட்டம் - யட்டியாந்தோட்டை பிரதேச சபை**

*1. இந்த உப கட்டளைச்சட்டம் யட்டியாந்தோட்டைப் பிரதேச சபை எல்லைக்குள் அமைந்திருக்கும் தொழில்கள் மற்றும் வியாபாரங்கள் சம்பந்தமாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு கூலி அல்லது வேறு ஏதாவது கட்டணம் அறவிடுதல் தொடர்பாக தகவல்கள் மற்றும் விபரங்கள் பெற்றுக்கொள்ளுதல் பற்றிய உபகட்டளைச்சட்டம் எனப் பொருள்படும்.*

*2. இந்த உப கட்டளைச் சட்டம் மூலம் அறவிடக்கூடிய வரி, கூலி அல்லது யாதாயினுமொரு கட்டணம் அறவிடுவதற்காகத் தகவல்கள் மற்றும் முறை விபரங்கள் பெற்றுக்கொள்ளல், பன்முகப்படுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் போன்றவை எதிர்பார்க்கப்படுகின்றது.*

*3. (அ) இந்த உபகட்டளைச் சட்டத்தின் நிபந்தனைகள் இந்த வர்த்தமானி பத்திரிகை பிரசுரமாகும் நாள்முதல் செல்லுபடியாகும்.*

*(ஆ) இந்த உப கட்டளைச்சட்டம் யட்டியாந்தோட்டைப் பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள இல. 01 - அட்டவணையின் பிரகாரம் வியாபாரங்கள், தொழில்கள் என்பன பற்றியதாகும்.*

*4. 3 (ஆ) கட்டளைச்சட்டத்தின் அட்டவணையின் பிரகாரம் தம்மால் நடாத்தப்படும் வியாபாரத் தொழில்கள்*

*5. இந்த உப கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் மற்றும் தகவல்கள் பற்றிச் செயலாளர் வெளியிடும் விளம்பரம், அறிவுறுத்தல் அல்லது வேறு முறையால் அறிவுறுத்தப்பட்டு அத்தினத்திலிருந்து 30 தினங்களுக்குள் யட்டியாந்தோட்டைப் பிரதேச சபைக்கு சாதாரண தபால் மூலம் அல்லது பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். நேரடியாகச் சமர்ப்பிக்கப்படும் எல்லாக் கடிதங்களும் யட்டியாந்தோட்டைப் பிரதேசசபைச் செயலாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலருக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.*

*6. மேற்குறிப்பிட்ட பிரிவின் பிரகாரம், 30 தினங்களுக்குள் சபைக்குப் பெற்றுக்கொடுக்கும் தகவல்கள் மற்றும் விபரங்கள் தொடர்பாக அவை சபையால் பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கு அத்தாட்சியாக யட்டியாந்தோட்டைப் பிரதேச சபையால் பற்றுச்சீட்டு அல்லது வேறு ஏதாவதொரு அத்தாட்சிப்பத்திரம் வழங்குவது சபையின் பொறுப்பாகும்.*

*7. குறித்த 30 தினங்களுக்குள் அவசிய விபரங்கள் மற்றும் தகவல்கள் கிடைக்கப்பெறாவிடின், அவை சபைக்கு அவசியமாகும் தருணத்தில் சபைத்தலைவர் அல்லது செயலாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு குறித்த தகவல்களை பெற்றுக்கொள்வதற்கும் வியாபார நிலையத்தை பரிசோதிப்பதற்கும் இவ்வுபகட்டளைச்சட்டம் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.*

*8. இவ்வுப கட்டளைச்சட்டம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியின் பின்னர் ஆரம்பிக்கப்படும் செயற்திட்டங்கள் அல்லது தொழில்கள் இருக்குமாயின் அதன் உரிமையாளர் அல்லது முகாமையாளர் அத்தொழில் ஆரம்பிக்கப்பட்டு 30 தினங்களுக்குள் அது தொடர்பாகப் பிரதேச சபைக்கு அறிவித்தல் வேண்டும்.*

*09.* குறிப்பிட்ட இடமொன்றில் நடைபெறும் செயற்றிட்டங்கள் அல்லது தொழில்கள் சம்பந்தமாக ஏதாவது மாற்றங்கள் செய்யப்படுமிடத்து மாற்றங்கள் செய்யப்பட்ட 30 தினங்களுக்குள் அதன் உரிமையாளர் அல்லது முகாமையாளரால் சபைத்தலைவர் அல்லது செயலாளருக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

*10.* ஒரே இடத்தில் பல்வேறுபட்ட தொழில்கள் அல்லது வியாபாரங்கள் நடபெறுமாயின் அவை தொடர்பான தகவல்கள் இல. 02 - அட்டவணையின் வடிவில் வெவ்வேறாக சபைக்கு வழங்குதல், குறித்த தொழிலின் அல்லது வியாபாரத்தின் உரிமையாளரின் பொறுப்பாகும்.

*11.* இவ்வுபகட்டளைச் சட்டமூலம் கேட்கப்படும் தகவல்கள் மற்றும் விபரங்களைக் குறிப்பிட்ட கால எல்லைக்குள் வழங்காதிருத்தல் அல்லது உதாசீனப்படுத்தல் அல்லது பொய்யான தகவல்களை வழங்குதல் பாரியகுற்றமாகும். அதேவேளை யாராயினும் ஒருவர் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் கருதப்படுமிடத்து 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122 (2) ஆம் பிரிவுக்கமைய, நிர்ணயிக்கப்பட்ட தண்டப்பணம் மூலமாகவும், குற்றவாளியாகக் கருதப்பட்ட பின்னர் தொடர்ச்சியாக இத்தவறைச் செய்வாராயின் அவற்றை அவதானித்து, சபைத்தலைவர் அல்லது செயலாளர் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரால் எழுத்துமூலமாக அத்தவறு சுட்டிக்காட்டப்பட்ட பின்னரும் தவறு செய்யப்படுமிடத்து தவறு இடம்பெறும் ஒவ்வொரு நாளுக்கும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122 (2) ஆம் பிரிவின் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ள மேலதிகத் தண்டப்பணமொன்றிற்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

*12.* **கருத்து வெளிப்பாடு (பொருள்)**

இதில் இடம்பெறும் சொற்கள் தொடர்பாக வேறு பொருள்படும் சந்தர்ப்பங்கள் தவிர-

* 'சபை' என்பது யட்டியாந்தோட்டைப் பிரதேச சபையும்

* 'தலைவர்' என்பது யட்டியாந்தோட்டைப் பிரதேச சபைத் தலைமைப் பொறுப்பை வகிப்பவரையும்,

* 'செயலாளர்' எனும்போது யட்டியாந்தோட்டைப் பிரதேச சபையின் செயலாளராகப் பதவி வகிக்கும் நபரையும்

* 'அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்' எனும்போது யட்டியாந்தோட்டைப் பிரதேச சபைத் தலைவர், செயலாளரால் எழுத்துமூல அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அலுவலரையும் குறிக்கும்.

* 'இங்கு' எனும்போது வியாபாரம் அல்லது தொழில்மூலம் கிடைக்கும் அனைத்து வருமானங்களுமாகும்.

* 'வியாபாரம்' எனும் போது பொருள் அல்லது சேவை உற்பத்தி அல்லது வழங்குதல் அல்லது விற்பனை செய்தல் போன்றவற்றைச் செய்யும் தனிநபர், குழு அல்லது நிறுவனத்தை குறிக்கும்.

*13.* இவ்வுபகட்டளைச் சட்டத்தில் இடைக்கிடை அவசியமான திருத்தங்களை மேற்கொள்ளும் அதிகாரம் யட்டியாந்தோட்டைப் பிரதேச சபைக்கு உள்ளது.

*14.* இவ்வுபகட்டளைச் சட்டத்தின் தமிழ் மற்றும் ஆங்கில பிரசுரிப்பில் ஏதாவது தொடர்பின்மை புலப்படுமாயின் சிங்கள வடிவம் செல்லுபடியானதாக அமையும்.

**இல. 1 - அட்டவணை**

* இலங்கைச் சுற்றுலாச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட உணவுச்சாலைகள் அல்லது தங்குமிட விடுதிகள்.
* இலங்கை முதலீட்டுச்சபையால் அனுமதிக்கப்பட்டுள்ள மின்னுற்பத்தி நிலையங்கள்
* தொழிற்சாலைகள்
* புடவைத் தொழிற்சாலைகள்
* வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம்
* சுப்பர் மார்க்கெட்
* பதிவு செய்யப்பட்டுள்ள மதுபான சாலைகள்
* தனியார் போக்குவரத்துச் சேவை நிறுவனங்கள்
* வாகன ஓட்டுதல் பயிற்றுவிக்கும் நிறுவனங்கள்
* பணவைப்பு மற்றும் கடன் வழங்கலில் ஈடுபடும் எல்லா நிதி நிறுவனங்களும்
* காப்புறுதி நிறுவனங்கள்
* கணக்கீட்டு நிறுவனங்கள்
* தனியார் வைத்திய சோதனை நிலையம்

* சுவாதீன குத்தகை நிறுவனம்
* ஏலதாரர் அல்லது தரகர்கள்
* இரத்தினக்கல் விற்பனையாளர்கள்
* கொங்கிரீட் வேலை நிலையங்கள்
* வியாபாரம் பதிவுசெய்யும் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள அனைத்து வியாபாரங்களும்

**இல. 2 - அட்டவணை**

1. உரிமையாளரின் பெயர் :----.
2. தேசிய அடையாள அட்டையின் இலக்கம் :----.
3. விலாசம் :----.
4. வியாபார நிலையத்தின் வருடாந்த பெறுமதி :----.
   (i) வரிமதி இல. :----.
   (ii) கடந்த வருட வருடாந்த வருமானம் (விபரம்)
5. வியாபார/உற்பத்தி/தொழிலின் தன்மை :----.
6. வியாபார/தொழில் மூலப்பொருட்கள் அல்லது சேவைகள் உற்பத்தி இடம்பெறுமாயின் அவை பற்றிய விபரங்கள் (விபரங்கள் மறுபக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.) :----.
7. சேவைசெய்யும் தொழிலாளர் எண்ணிக்கை :----.
8. வியாபாரம்/தொழில் வேறு ஏதாவதொரு திணைக்களத்தின்கீழ் அல்லது நிறுவனத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதாயின் அவை பற்றிய விபரம் :----.
9. ஏனையவை :----.

என்னால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானதும் பிழையற்றதுமென இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பம்
(வியாபார/தொழிற்சாலை/தொழில்)
உரிமையாளர்.

திகதி :----.

1-534/2

---

**யட்டியாந்தோட்டை பிரதேச சபை**

துணை விதிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய அச்சட்டத்தின் 69 ஆம் பிரிவின்/126 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் யட்டியாந்தோட்ட பிரதேச சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய மேற்கூறிய பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர் மஹீபால ஹேரத் ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதும் இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதி தொடக்கம் மேற்கூறிய துணைவிதிகள் யட்டியாந்தோட்டை பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் செயற்படும் என்பதும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மஹீபால ஹேரத்,
உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர்,
சப்பிரகமுவ மாகாணம்.

சப்பிரகமுவ மாகாண சபை,
புதிய நகரம்,
இரத்தினபுரி,
2009.12.18.

**புராதன இடங்கள், இயற்கைக்காட்சிகள் நிறைந்த இடங்களைப் பார்வையிடுதலைப் பன்முகப்படுத்தல், கட்டுப்படுத்தல், பாதுகாத்தல் தொடர்பான உபகட்டளைச் சட்டம் - யட்டியாந்தோட்டை பிரதேச சபை**

*1. இவ்வுபகட்டளைச் சட்டம் யட்டியாந்தோட்டைப் பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள புராதன இடங்கள், இயற்கைக்காட்சிகள் நிறைந்த இடங்களைப் பார்வையிடுதலைப் பன்முகப்படுத்தல், பாதுகாத்தல், கட்டுப்படுத்தல் தொடர்பான கட்டளைச்சட்டமாகும்.*

*2. (i) இங்கு உப அட்டவணை 01 இல் குறிப்பிடப்படும் இடங்களைப் பார்வையிட கால்நடையாகச் செல்லுதல், வாகனங்கள் மூலம் பயணித்தல், வாகனங்களை உட்செலுத்துவதற்கு யட்டியாந்தோட்டைப் பிரதேச சபை நாமம்பொறிக்கப்பட்ட இலச்சினையை இரண்டாம் உப அட்டவணையில் காட்டப்பட்டுள்ள நிலையான கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதிச்சீட்டு வைத்திருப்போர் அன்றி வேறு எவரும் வைத்திருத்தலாகாது.*

*(ii) இவ்வுபகட்டளைச் சட்டத்தின் 02 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களைத் தேவைக்கேற்ப மாற்றும் அதிகாரம் யட்டியாந்தோட்டைப் பிரதேச சபைக்கு உண்டு.*

*3. (i) புராதன இடங்களை அல்லது இயற்கைக் காட்சிகள் நிறைந்த இடங்களில் அமைந்துள்ள மரம், செடி, கொடிகளுக்கு, பெறுமதிமிக்க புராதன சொத்தொன்றுக்கு, கற்குகைகளுக்குச் சேதமேற்படும் வகையில் நடத்தல் அல்லது பெயர் விலாசம் போன்றவற்றை எழுதுதுதல் என்பவை செய்யப்படலாகாது.*

*(ii) அப்படி இடம்பெறுமாயின் சட்டப்படி குறித்த நட்டத்தைக் குறித்த நபர் அல்லது குழுவிடமிருந்து அறவிடப்படுவதற்கு கட்டுப்படுதல் வேண்டும்.*

*4. பொலித்தீன், பிளாஸ்டிக்குப் பொருட்கள், உலோக பாண்டங்கள், போத்தல், துணித்துண்டு, பைகள் அல்லது வேறு கழிவுப்பொருட்கள் பிரதேச சபையால் வைக்கப்பட்டிருக்கும் குப்பைத் தொட்டிகள் அல்லது அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் மாத்திரம் கொட்டப்படல் வேண்டும்.*

*5. யாதாயினுமொரு வகையில் மேற்குறிப்பிட்ட இடங்களில் உள்ள நீரூற்றுக்கள், ஆறு, ஓடை, ஏரி போன்றவற்றை அழுக்காக்குதல், கழிவுகளைச்சேர்த்தல், போதையில் அநாவசியமான முறையில் நடந்துகொள்ளல் மற்றும் பார்வையாளர்களுக்கு இடையூறு ஏற்படுத்துதல் போன்றவை தவிர்க்கப்படல் வேண்டும்.*

*6. 01 உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள புராதன இடங்கள் இயற்கைக்காட்சிகள் நிறைந்த இடங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிப் புகைப்படங்கள் எடுத்தல், சினிமா தயாரித்தல், போன்றவற்றுக்கு 3 ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தைச் செலுத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.*

*7. குறித்த கட்டணம் செலுத்தி அனுமதிப்பத்திரம் பெறப்பட்டுள்ளதா என்பதைச் சபைத்தலைவர், அவரது முகவர், செயலாளர் மற்றும் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் ஆகியோருக்குப் பரிசோதிக்கும் உரிமை உண்டு.*

*8. பிரதேச சபைத் தலைவரின் பூரண அனுமதியுடன் சபை எல்லைக்குள் வசிக்கும் விசேட அனுமதி வழங்கக் கூடியவர்களுக்கு இக்கட்டணம் விலக்கப்படும். அதேவேளை மாணவர்கள் மற்றும் கல்விச் சுற்றுலாப் பயணிகள் எழுத்துமூலம் கட்டணச்சலுகை வேண்டிநிற்கும் சந்தர்ப்பத்தில் இக்கட்டணம் விலக்கப்படலாம்.*

*9. இவ்வுபகட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் கால எல்லை காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரையாகும். அதே வேளை இக்காலத்தின் பின் குறித்த பிரதேசத்திற்குள் தங்கியிருத்தல், குழுக்களாகக் கூடியிருத்தல் போன்றவை தடை செய்யப்பட்டுள்ளதோடு இவை தொடர்பாகச் சபைத் தலைவருக்கு அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு அவர்களை வெறியேற்றும் உரிமையும் அவர்களை நீதியின்முன் நிறுத்தும் அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது.*

*10. செல்லுபடியாகும் காலஎல்லைக்குப் பின்னர் குறித்த பிரதேசங்களில் புகைப்படமெடுத்தல் அல்லது வேறு தேவைகளுக்காகத் தங்கியிருக்கும் தேவையேற்படின் யட்டியாந்தோட்டைப் பிரதேசசபைத் தலைவரின் பூரண எழுத்துமூல அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.*

*11. இவ்வுபகட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள யாதாயினுமொரு பிரதேசத்தினுள் மதுவகைகள் எடுத்துச்செல்லுதல் மற்றும் அவ்விடத்தில் மது அருந்துதல் போன்றவைச் செய்யலாகாது.*

*12. இவ்வுப கட்டளைச்சட்டத்தில் அடங்கியுள்ள யாதாயினுமொரு இடத்தில் பாதுகாப்பற்ற தன்மை தமது உதாசீனத்தால் அல்லது மதுபோதையால் ஏற்படக்கூடிய ஏதாயினுமொரு விபத்துக்குறித்துப் பிரதேச சபை உத்தரவாதம் அளிக்காத அதேவேளை பார்வையாளர்கள் தத்தமது பாதுகாப்பைத் தாமே உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.*

13. இங்கு 1 ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வாழும் பிராணிகளுக்கு இடையூறுவிளைவித்தல் அல்லது அவற்றைத் துன்புறுத்துதல் போன்ற காரியங்கள் செய்யலாகாது.

14. இவ்வுபகட்டளைச் சட்டத்தின் 1 ஆவது அட்டவணையில் குறிப்பிடப்படும் இடங்களில் அநாகரிகமான முறையில் அல்லது வெறுக்கத்தக்க முறையில் எவரும் நடந்துகொள்ளாதிருத்தல்.

15. இக்கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசத்தினுள் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க அல்லது நூதன சிறப்புமிக்க அல்லது சமூக விஞ்ஞான சிறப்புமிக்க இடங்களைப் பார்வையிடும்போது அங்கு அமைக்கப்பட்டிருக்கும் எல்லைக்கு வெளியிலிருந்து பார்வையிடுதல் அவசியமாகும்.

16. இக்கட்டளைச் சட்டத்தின் 1 ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் சபையால் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் விளம்பரங்கள் மற்றும் அறிவுறுத்தல்களை யாவரும் பின்பற்றல் அவசியமாகும்.

17. இவ்வுபகட்டளைச் சட்டத்தை மீறுபவர்கள் தண்டனைக்கு உரியவர்களாகும் அதேவேளை நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் கருதப்பட்ட பின்னர் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122 (2) பிரிவின்கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள தண்டப் பணத்தைச் செலுத்துதல் வேண்டும். அதேபோல் இச்சட்டத்தைத் தொடர்ச்சியாக மீறுபவர்கள் நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் கருதப்படும்வேளை அல்லது அதனை அவதானித்துச் சபைத்தலைவர் அல்லது அதிகாரம்பெற்ற வேறு உத்தியோகத்தரால் எழுத்துமூல அறிவித்தல் வழங்கப்பட்ட பின்னரும் அத்தவறைச் செய்யும் ஒவ்வொரு நாட்களுக்கும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபையின் 122 (2) பிரிவின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்டுள்ள மேலதிக தண்டனைக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

18. இவ்வுப கட்டளைச் சட்டம் தொடர்பாக வேறு பொருள்படும் சந்தர்ப்பங்கள் தவிர "தலைவர்" எனும்போது யட்டியாந்தோட்டை பிரதேசசபைத் தலைவரையும் சபைத்தலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட "உத்தியோகத்தர்" எனும்போது யட்டியாந்தோட்டை பிரதேச சபைச் செயலாளர் வருமான உத்தியோகத்தர் அல்லது அதிகாரம்பெற்ற சபையின் யாராவதொரு அலுவலரையும் குறிக்கும்.

19. இவ்வுபகட்டளைச்சட்டத்தின் தமிழ் அல்லது ஆங்கில பிரசுரிப்பில் ஏதாவது தொடர்பின்மை புலப்படும் சந்தர்ப்பத்தில் சிங்கள வடிவம் செல்லுபடியானதாகக் கருதப்படும்.

**அட்டவணை இல. 1**

(i) கித்துல்கல பறவைகள் வாழும் பிரதேசம்
(ii) கித்துல்கல பெல் குகை
(iii) வீ ஓயா தெப்பக்குளம்

**அட்டவணை இல. 2**

| | | |
|---|---|---|
| (i) | கால்நடையாகப் பயணிப்பவர்கள் : | ரூ. ச. |
| | உள்நாட்டு | 20 0 |
| | வெளிநாட்டு | 100 0 |
| (ii) | வாகனம் நிறுத்துமிடக் கட்டணம் | |
| | 15 இருக்கைகளுக்கு குறைவான மினிபஸ், வேன் | 100 0 |
| | 15 இருக்கைகளுக்கு மேற்பட்ட பஸ், லொரி | 200 0 |
| | கார் | 50 0 |
| | முச்சக்கர வண்டி | 30 0 |
| | மோட்டார் சைக்கில் மற்றும் மிதிவண்டி | 20 0 |

**அட்டவணை இல. 3**

| | | |
|---|---|---|
| | | ரூ. ச. |
| (i) | யாதாயினுமொரு காட்சிக்கு அல்லது தொலைகாட்சி நாடகக் காட்சி ஒன்றுக்கு ஒரு நாளைக்கான கட்டணம் | 1,000 0 |
| (ii) | விளம்பர காட்சிக்கு ஒரு நாளைக்கு | 50 0 |
| (iii) | கைப் புகைப்படக் கருவி கொண்டு செல்வதற்கு | 20 0 |
| (iv) | வீடியோ கருவி கொண்டு செல்வதற்கு (கை) | 50 0 |

1-534/3

## யட்டியாந்தோட்டை பிரதேச சபை

துணை விதிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய அச்சட்டத்தின் 69 ஆம் பிரிவின்/126 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் யட்டியாந்தொட்ட பிரதேச சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய மேற்கூறிய பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர் மஹீபால ஹேரத் ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதும் இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதி தொடக்கம் மேற்கூறிய துணைவிதிகள் யட்டியாந்தோட்டை பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் செயற்படும் என்பதும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மஹீபால ஹேரத்,
உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர்,
சப்பிரகமுவ மாகாணம்.

சப்பிரகமுவ மாகாண சபை,
புதிய நகரம்,
இரத்தினபுரி,
2009.12.18.

### வாகனங்களுக்கான நிறை மற்றும் வேகத்தைக் கட்டுப்படுத்தல், போக்குவரத்தைப் பன்முகப்படுத்தல் தொடர்பான உபகட்டளைச் சட்டம் - யட்டியாந்தோட்டை பிரதேச சபை

1. இவ்வுபகட்டளைச் சட்டமானது சபை எல்லைக்குள் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களின் நிறை மற்றும் வேகத்தைக் கட்டுப்படுத்தல், போக்குவரத்தைப் பன்முகப்படுத்தல் தொடர்பான கட்ளைச்சட்டமாக கருதப்படும்.

2. யட்டியாந்தோட்டைப் பிரதேச சபையால் சபைக்குச் சொந்தமான வீதிகள் மற்றும் வேறு அதிகார சபைகளுக்குச் சொந்தமல்லாத பிரதேச சபை எல்லைக்குள் அமைந்திருக்கும் வீதிகளில் தரை வாகன போக்குவரத்தைப் பன்முகப்படுத்தல், கட்டுப்படுத்தல் போக்குவரத்துக்கான வேகத்தை நிர்ணயித்தல் மற்றும் வீதிகளுக்கு ஏற்படும் சேதங்களை மட்டுப்படுத்தல் போன்றவை இவ்வுப கட்டளைச்சட்டத்தின் நோக்கமாகும்.

3. (i) இதன்பின் பிரதேச சபைத் தலைவரினால் வெளியிடப்படும் முதலாம் உப அட்டவணையில் குறிப்பிடப்படும் கட்டணங்கள் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்படும் அனுமதிப் பத்திரம் வைத்திருத்தலன்றி மேலே 2 ஆவது பிரிவில் குறிப்பிடப்படும் வீதிகளில் 2 டொன்களுக்கு மேல் பாரமுடைய டிப்பர், லொறி, டிரக்டர், வீதி அபிவிருத்தி செய்யும் இயந்திரம் போன்றவை போக்குவரத்தில் ஈடுபடுதல் மற்றும் கல், மணல், அனைத்துக் கட்டிடப்பொருட்கள் அல்லது தேயிலை, இறப்பர் உற்பத்திகள் ஏற்றிச்செல்லலாகாது. இங்கு 2ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வீதிகளில் டக்டர் மூலம் பாரம் கொண்டுசெல்லல், மரக்குற்றிகள் இழுத்துச் செல்லல் அல்லது வேறு பொருட்கள் இழுத்துச் செல்லல் போன்றன செய்யலாகாது.

(ii) காற்றடைத்த டயர்களற்ற வாகனங்களை வேறு வாகனங்களில் ஏற்றாது பிரதேச சபை வீதிகளில் போக்குவரத்தில் ஈடுபடக்கூடாது.

4. பிரதேச சபைக்கு சொந்தமான வீதிகளில் போக்குவரத்தில் ஈடுபடக்கூடிய உச்ச வேகம் 25கிமீ க்கு அதிகரிக்கக் கூடாது.

5. (i) நபரொருவர் இவ்வுபகட்டளைச் சட்டத்தின் 2ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வீதியொன்றில் இவ்வுபகட்டளைச் சட்டத்தின் 1ஆவது அட்டவணையின் இரண்டாவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை எடுத்துச்செல்ல வேண்டுமானால் அதற்கான எழுத்துமூல விண்ணப்பத்தைச் சபைத்தலைவருக்கு வாரத்தின் 03 வேலை நாட்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

(ii) மேலே (5.i) உப பிரிவின் பிரகாரம் விண்ணப்பமொன்று கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்தில் சபை தலைவரால் தொழிநுட்ப உத்தியோகத்தர் ஒருவர் மூலம் விபரங்களை ஆராய்ந்து நிர்ணயிக்கப்படும் கட்டணமொன்றையும் வீதிகளுக்கு ஏற்படும் சேதங்களுக்கான முற்பண வைப்பொன்றும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

(iii) மேலே (5.ii) உப பிரிவின் கீழ் முற்பண வைப்பும் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தையும் பெற்றுகொண்ட பின்னர் ஒப்பந்தமொன்றையும் ஏற்படுத்திக்கொண்ட பின்னரன்றிக் குறிப்பிட்ட அனுமதியை வழங்கலாகாது.

(iv) மேலே (5.iii) உப பிரிவின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பண வைப்பைத் திருப்பித்தருமாறு கேட்கப்படும்போது முதலில் 10% திணைக்களக் கட்டணத்தையும் அதன்பின்னர் சேதங்கள் ஏற்பட்டிருப்பின் அதன் நட்டத்தையும் நிர்ணயித்து அறவீடு செய்தல் வேண்டும்.

(v) ஏற்பட்ட சேதம் முற்பண வைப்பிற்கும் அதிகமானால் அதன் மேலதிக தொகையையும் செலுத்துமாறு குறித்த நபருக்குக் கட்டளையிடுதல் விதியாகும். அதேபோல் மேலதிக தொகை செலுத்துமாறு கேட்கப்பட்டிருக்கும் வேளையில் அதனை உதாசீனம் செய்வாராயின் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, குறித்த மீதிப் பணத்தை அறவிட்டுக்கொள்ளப் பிரதேச சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(vi) மேலே (5.v) உப பிரிவின் படி செயற்படுவதற்கு முன்னர் சலுகைகள் வழங்குவதற்கு சபைத்தலைவர் இணங்கும்போது அதனைப் பிரதேச சபையின் இறுதிச்சபைக்கு (மகாசபை) சமர்ப்பித்து எடுக்கப்படும் தீர்மானங்களுக்கமைய அச்சலுகைகளை வழங்கச் சபைத்தலைவருக்கு அதிகாரமுள்ளது.

6. பிரதேச சபையின் அபிவிருத்திப் பணிகளுக்காக ஏற்படுத்தப்படும் ஒப்பந்தங்களுக்கு சொந்தக்காரர் சபைத் தலைவருக்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்கும்போது 1 ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களை விளக்கிக்கொள்ளலாம்.

7. இவ்வுப கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்படும் எல்லா அனுமதிப்பத்திரங்களையும் பரீட்சிக்கும் அதிகாரம் பொலிஸ் உத்தியோகத்தர், சபைத்தலைவர் அல்லது செயலாளர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட வேறு உத்தியோகத்தர் மூலம் செயற்படுத்தல் நடைமுறையாகும்.

8. இவ்வுபகட்டளைச் சட்டத்திலுள்ள சட்டங்களை மீறுவது தவறாகும். அதேவேளை நீதிமன்றத்தால் குற்றவாளியாக கருதப்படும்போது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122 (2) ஆவது பிரிவின்கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள தண்டப்பணத்தையும் குற்றவாளி அத்தவறைத் தொடர்ச்சியாகச் செய்பவராயின் அதனை அவதானித்துச் சபைத்தலைவர் அல்லது செயலாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் எழுத்துமூலம் அறிவித்த பின்னரும் அத்தவறுசெய்யப்படுமானால் தவறு செய்யப்படும் ஒவ்வொரு நாளுக்கும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122 (2) பிரிவின் பிரகாரம் நிர்ணயிக்கப்படும் மேலதிக தண்டத்திற்கும் கட்டுப்படுத்தல் வேண்டும்.

9. இவ்வுபகட்டளைச் சட்டத்தின் தமிழ் மற்றும் ஆங்கில பிரசுரிப்பில் ஏதாவது கருத்து தொடர்பின்மை புலப்படுமாயின் அச்சந்தர்ப்பத்தில் அதன் சிங்கள வடிவம் செல்லுபடியானதாக கருதப்படும்.

10. இவ்வுபகட்டளைச் சட்டத்தில் 'பிரதேச சபை' எனும்போது யட்டியாந்தோட்டைப் பிரதேச சபையையும் 'தலைவர்' எனும்போது யட்டியாந்தோட்டை பிரதேச சபைத் தலைவரையும் 'செயலாளர்' எனும்போது யட்டியாந்தோட்டைப் பிரதேச சபைச் செயலாளரையும் வேறு 'அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்' எனும்போது பிரதேச சபை உத்தியோகத்தர் ஒருவரையும் 'பொலிஸ் உத்தியோகத்தர்' எனும்போது இலங்கைப் பொலிஸ் திணைக்கள உத்தியோகத்தரையும் குறிக்கும்.

**அட்டவணை இல. 1**

1. கல், மணல் உட்பட கட்டிட நிர்மாணப் பொருட்கள் மண், வேறு பொருட்கள் மற்றும் இறப்பர் உற்பத்திப் பொருட்கள், தேயிலை ஆகியன ஏற்றிச் செல்வதற்கு-

| காலம் | தொகை ரூபா ச. |
|---|---|
| * 01 மாதத்திற்கு | 100 0 |
| * 01 காலாண்டிற்கு | 275 0 |
| * 01 வருடத்திற்கு | 1,000 0 |

2. விறகு, மூங்கில் மற்றும் மரக்குற்றி ஏற்றிசெல்வதற்கு-

| | |
|---|---|
| * டிரக்டர் வண்டி ஒரு முறை சென்று வருவதற்கு | 100 0 |
| * லொறி, டிப்பர், ட்றக் என்பன ஒருமுறை பயணிப்பதற்கு | 200 0 |
| * யானைகளைக் கொண்டு மரக்குற்றி இழுப்பதற்கு ஒரு நாளைக்கு | 500 0 |

**அட்டவணை இல. 2**

**வாகன தரிப்பிடங்கள், திகதி மற்றும் நேரம்**

| இடம் | திகதி | நேரம் |
|---|---|---|
| மணிக்கூண்டுக்கோபுர அயலிலிருந்து ஜனசரி ஸ்டோர்ஸ் வரை | இரட்டைத் திகதிகளில் ஜனசரி ஸ்டோர்ஸ் முன்பாக ஒற்றைத் திகதிகளில் | மு. ப. 6 இருந்து பி. ப. 6 மணி வரை |
| மக்கள் வங்கி முன்பாக ஜனசரி ஸ்டோர்ஸ் இடமிருந்து இலங்கை வங்கி வரை இடப்பக்கம் | தினமும் | மு. ப. 6 - பி. ப. 6 வரை |
| பருசல்ல வீதி களனிவெலி டிரேட் சென்டர் முன்னிருந்து கூட்டுறவுச் சங்கம் வரை வலப்பக்கம் | தினமும் | மு. ப. 6 - பி. ப. 6 வரை |

**யட்டியாந்தொட்ட பிரதேச சபை**

*துணை விதிகள்*

*1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்கவேண்டிய அச்சட்டத்தின் 69 ஆம் பிரிவின் 126 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் யட்டியாந்தொட்ட பிரதேச சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள துணை விதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்கவேண்டிய மேற்கூறிய பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர் மஹீபால ஹேரத் ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதும் இவ்வறிவித்தல் வர்த்தமானப்பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதி தொடக்கம் மேற்கூறிய துணை விதிகள் யட்டியாந்தொட்ட பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் செயற்படும் என்பதும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*மஹீபால ஹேரத்,*
*உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர்,*
*சப்பிரகமுவ மாகாணம்.*

*சப்பிரகமுவ மாகாண சபை,*
*புதிய நகரம்,*
*இரத்தினபுரி,*
*2009, திசெம்பர் 18.*

**பெருமணல், கருங்கல், சீமெந்து மற்றும் மணல் வேலை நிலையங்களைப் பன்முகப்படுத்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான உபகட்டளைச் சட்டம் - யட்டியாந்தோட்டை பிரதேச சபை.**

*1. இவ்வுபகட்டளைச்சட்டம் யட்டியாந்தோட்டைப் பிரதேச சபை எல்லைக்குள் கருங்கல், சீமெந்து, மணல் மற்றும் பெருமணல் சம்பந்தமான தொழில் நிலையங்களைப் பன்முகப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான கட்டளைச்சட்டம்.*

*2. யட்டியாந்தோட்டைப் பிரதேச சபை எல்லைக்குள் உப அட்டவணை 01 இல் குறிப்பிடப்படும் யாதாயினுமொரு வேலை நிலையத்தை நடாத்துவதாயின் அல்லது நடாத்துவதற்குத் திட்டமிடுவதாயின் அந்நிலையங்களில், வீதியில், வீதியோரம், ஒரு வீட்டுக்கு அயலில் அல்லது காணியின் பிரதேசத்திலாயின் அத்தொழிலின் உரிமையாளர் அல்லது வசிப்பவர், வரி அறவீட்டாளர் அல்லது யட்டியாந்தோட்டைப் பிரதேச சபைத் தலைவர் ஆகியோரால் நிர்ணயிக்கப்படும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு அவரது அறிவுறுத்தல்களுக்கமைய 01 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்களை மேற்கொள்ளல் வேண்டும்.*

*3. இத்தொழில்கள் சம்பந்தமாக யாதாயினும் கட்டிடவேலைகள், நிர்மாணவேலைகள், புதுப்பித்தல் அல்லது வேறு யாதேனும் மாற்றங்களைச் சபை அனுமதியின்றிச் செய்யலாகாது.*

*4. இத்தொழில்கள் சம்பந்தமாக வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் முன்னரே செல்லுபடியற்றதாக்கப்படாத சந்தர்ப்பங்களில் அவை வருடத்தின் திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி வரை செல்லுபடியானதாகக் கருதப்படும்.*

*5. கருங்கல், சீமெந்து, மணல் மற்றும் பெருமணல் தொடர்பான தொழில்களுக்கு வருடாந்த அனுமதிப்பத்திரம் அவ்வருட சனவரி 31 ஆந் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். அதேவேளை, புதிதாக ஆரம்பிக்கப்படும் தொழிலாயின் ஆரம்பிக்கப்பட்டு 30 தினங்களுக்குள் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். இத்தொழில்கள் சம்பந்தப்பட்ட ஏதாவது நிர்மாணவேலைகள் புதுபித்தல்கள் அல்லது மாற்றங்கள் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுமிடத்து அதற்கான அனுமதியைச் சபையிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.*

*6. கருங்கல், பெருமணல், சீமெந்து, மணல் தொடர்பான தொழில்களுக்கு வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்கள் யட்டியாந்தோட்டைப் பிரதேச சபையால் முன் அறிவிக்கப்பட்ட கட்டணங்கள் மற்றும் அறிவித்தல்களுக்குக் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.*

*7. இங்கு பின்குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்படாதவர்கள் இவ்வுபகட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்படும் எந்தவொரு தொழிலையும் மேற்கொள்ள அனுமதிப்பத்திரம் பெறத் தகுதியற்றவர்களாவர் :-*

(i) *குறித்த தொழில் தொடர்பாக வியாபார அனுமதிப்பத்திரம் மற்றும் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.*

(ii) கருங்கல், சீமெந்து, மணல், பெருமணல் தொடர்பான தொழில்களுக்கான மூலப்பொருட்கள் உற்பத்திகள் என்பவற்றை ஏற்றல், இறக்கல், களஞ்சியப்படுத்தல் போன்ற காரியங்கள் வீதிகள், தெருக்கள் அல்லது தனியார் பாதைகளுக்கு எவ்வித சேதமும் ஏற்படாத வகையில் இடம்பெற வேண்டும் ;

(iii) கருங்கல், சீமெந்து, மணல், பெருமணல் தொடர்பான தொழில்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்படும்போது எழுத்துமூல எல்லைத் தூரங்கள் நியமிக்கப்படாத இடத்து இவ்வுபகட்டளைச் சட்டம் செல்லுபடியாகும் திகதியிலிருந்து வழிபாட்டுத் தலங்கள், வைத்தியசாலைகள், நீதிமன்ற வளாகம், பாடசாலைகள், நீரூற்றுக்கள் உள்ள இடங்கள் மற்றும் பாதுகாக்கப்படும் காடுகள் போன்ற இடங்களிலிருந்து 200மீ. தூரத்திற்கு அப்பால் அமைக்கப்படல் வேண்டும் ;

(iv) கருங்கல், சீமெந்து, மணல், பெருமணல் தொழிற்சாலைகள் சபையால் அனுமதிக்கப்படும் தரத்திற்கு அமைவானதாக அமைக்கப்படல் வேண்டும் ;

(v) கருங்கல், சீமெந்து, மணல், பெருமணல் தொடர்பான தொழில்களில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு அவர்களின் சுய பாதுகாப்புக்காக, சுகாதாரத்திற்குக் கேடு விளைவிக்காதிருப்பதற்காகக் கையுறைகள், காலணிகள் மற்றும் தொப்பிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(vi) கருங்கல், சீமெந்து, மணல், பெருமணல் தொழிற்சாலைகளால் வெளியிடப்படும் கழிவுகள் முறையாக அகற்றுவதற்கான வசதிகள் அமைக்கப்பட்டிருத்தல் ;

8. 7 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் ஒன்றை அல்ல ஒரு பகுதியை அல்லது முற்றாக மீறும் சந்தர்ப்பத்தில் அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்யும் அதிகாரம் யட்டியாந்தோட்டை பிரதேச சபைக்கு உண்டு.

9. கருங்கல், சீமெந்து, மணல், பெருமணல் தொழிற்சாலைகளுக்குச் சென்று அளவீடு செய்வதற்கும் பரிசோதனைகள் செய்வதற்கும் யட்டியாந்தோட்டைப் பிரதேச சபைத் தலைவருக்கு அல்லது செயலாளருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

10. இவ்வுபகட்டளைச் சட்டத்திலுள்ள ஏதாவது கட்டளையை மீறுவது குற்றமாகும். அதேவேளை நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் கருதப்பட்டால் 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122 (2) பிரிவின்கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள தண்டப்பணத்தையும் குற்றவாளியாகக் கருதப்பட்டுத் தொடர்ச்சியாக அந்தத் தவறைச் செய்யுமிடத்து அதனை அவதானித்துச் சபைத்தலைவர் அல்லது செயலாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் எழுத்துமூலம் அறிவித்த பின்னரும் அத்தவறைச் செய்வதனால் அத்தவறு செய்யப்படும் ஒவ்வொரு நாளுக்கும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122 (2) பிரிவின்கீழ் நிர்ணயிக்கப்படும் மேலதிக தண்டத்திற்கும் உட்படுதல் வேண்டும்.

11. இவ்வுபகட்டளைச் சட்டத்தில் அடங்கியுள்ள ஏதேனும் சட்டத்தை மாற்றியமைத்துக்கொள்ளும் அதிகாரம் யட்டியாந்தோட்டைப் பிரதேச சபைக்கு உண்டு.

12. இவ்வுபகட்டளைச் சட்டத்தில் இடம்பெறும் சொற்கள் வேறுபொருள்படும் சந்தர்ப்பங்கள் தவிர 'தலைவர்' எனும்போது யட்டியாந்தோட்டைப் பிரதேச சபைத் தலைவரையும் 'செயலாளர்' எனும்போது பிரதேச சபைச் செயலாளரையும் 'சபை' எனும்போது யட்டியாந்தோட்டைப் பிரதேச சபையையும் குறிக்கும்.

13. அவ்வுபகட்டளைச் சட்டத்தின் தமிழ் மற்றும் ஆங்கில பிரசுரிப்பில் ஏதாவது கருத்துத் தொடர்பின்மை புலப்படுமாயின் அச்சந்தர்ப்பத்தில் இதன் சிங்கள வடிவம் செல்லுபடியானதாகக் கருதப்படும்.

1-534/5

---

## தெரணியகல பிரதேச சபை

### துணை விதிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய அச்சட்டத்தின் 69 ஆம் பிரிவின்/126 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தெரணியகல பிரதேச சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய மேற்கூறிய பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயம்

பொறுப்பான அமைச்சர் மஹீபால ஹேரத் ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதும் இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதி தொடக்கம் மேற்கூறிய துணைவிதிகள் தெரணியகல பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் செயற்படும் என்பதும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மஹீபால ஹேரத்,
உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர்,
சப்பிரகமுவ மாகாணம்.

சப்பிரகமுவ மாகாண சபை,
புதிய நகரம்,
இரத்தினபுரி,
2009.12.18.

**வாகனங்கள் நிறுத்தி வைத்தல், கட்டுப்படுத்துதல் சம்பந்தமான இடைக்கால யாப்பு**

1. இந்த இடைக்கால யாப்பு வரையப்பட்டுள்ள தெரணியகலை பிரதேசத்துக்குள் வாகனங்களை நிறுத்திவைப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் மட்டும் ஒழுங்கமைப்பதற்கான இடைக்கால யாப்பு என அறிமுகப்படுத்தப்படுகின்றது.

2. தெரணியகலை பிரதேச சபையின் நகர எல்லைக்குள் நான்காவது உப பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவாகன தரிப்பிடத்தில் விதிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தாது வாகனங்களை நிறுத்துதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

3. பொது வாகனம் நிறுத்தப்படும் இடத்தில் யாராவது ஒருவரால் மோட்டார் வாகனம் ஒன்று அதன் உரிமையாளர் அல்லது சாரதி பிரதேச சபையினால் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் இருந்தாலேயன்றி நிறுத்தப்பட கூடாது.

4. வாகனம் நிறுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள இடம் 1வது அட்டவணையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

5. இந்த உப யாப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள அனைத்து அனுமதிப்பத்திரங்களும் எந்த வாகனத்திற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டதோ அந்த வாகனத்தினை அடையாளம் காண்பதற்காக இலக்கத்தகடு தெளிவாக குறிப்பிடப்பட்டிருப்பதுடன் அனுமதிப்பதிரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கால வரையறை மாத்திரமே செல்லுபடியாகும்.

6. பொதுவாகன தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் வாகனத்தின் உரிமையாளர் அல்லது சாரதியினால் அந்த வாகனம் சம்பந்தமாக வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்கும் படி பொலிஸ் அதிகாரி அல்லது வாகன கட்டுப்பாட்டாளர் அல்லது பிரதேச சபை தலைவர் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ள யாராவது ஒரு அதிகாரியினால் கேட்கப்படுகின்ற எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அனுமதிப்பத்திரத்தை பரிசீலிப்பதற்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

7. யாராவது ஒருவர் மோட்டார் வாகனம் ஒன்றினை பொதுவாகனம் நிறுத்தும் இடத்திற்கு உட்பிரவேசிக்கும் அல்லது வெளியாகும் வாகனத்திற்கு இடையூறு ஏற்படும் இடத்து தமது வாகனத்தை நிறுத்துவதை தவிர்க்க வேண்டும்.

8. யாராவது ஒருவர் பொதுவாகன தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் மோட்டார் வாகனம் ஒன்றினை கழுவுவதை தவிர்க்க வேண்டும். வாகனம் ஒன்றினை வாகன தரிப்பிடத்திலிருந்து அகற்றிக் கொள்வதற்காக செய்கின்ற திருத்த வேலைகளை தவிர்ந்த வேறு எந்த வேலைகளையும் செய்வதை தவிர்த்தல் வேண்டும்.

9. மோட்டார் வாகனம் நிறுத்தப்பட்டிருக்கும் இடத்தில் மதுபானம் அருந்துதல் மற்றும் வியாபாரம் செய்தல் தவிர்த்தல் வேண்டும்.

10. இந்த உபயாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பிரமாணங்கள் ஒவ்வொரு நாளும் காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை மாத்திரம் செல்லுபடியாகும்.

11. இந்த உபயாப்பு சம்பந்தமான அனைத்து மீறல்களும் குற்றமாக கருதப்படுவதுடன் எவராவது ஒருவர் நீதிமன்றத்தினால் குற்றமொன்றிற்காக குற்றவாளியாக்கப்படுமிடத்து 1987 ஆம் அண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தின் 122 உப பிரிவின் படி நியமிக்கப்பட்டுள்ள வேறு அதிகாரியினால் எழுத்து மூலம் அறிவித்தல் கையளிக்கப்பட்ட பின்னரும் மீண்டும் குற்றம் செய்கின்ற ஒவ்வொரு நாளும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தின்படி 122 பந்தியின்படி நியமிக்கப்பட்டுள்ள மேலதிக தண்டத்துக்கு கட்டுப்படுத்தல் வேண்டும்.

12. முச்சக்கர வண்டிகள் 2 ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மாத்திரம் நிறுத்தப்படவேண்டியதுடன் 3 ஆவது உபபட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளதின்படி கட்டணம் செலுத்தி அனுமதிபத்திரத்தை பெற்றுகொள்ளல் வேண்டும்.

13. இந்த யாப்பின் ஆங்கிலம் அல்லது தமிழ் மொழிபெயர்ப்பில் பொருந்தாத சந்தர்ப்பங்கள் காணப்படும் இடத்து சிங்களம் மாத்திரமே அமுலில் இருக்கும்.

***இந்த இடைக்கால யாப்பில் விளக்கம் தேவைப்படின் -***

* மோட்டார் வாகனம்.- லொறி ரெயிலர் ஊடான டிரக்டர் முச்சக்கர வண்டி, பஸ்வண்டி, கெப், டிபர், கார், மோட்டார் சைக்கிள், ஜீப்வண்டி மற்றும் அசையக்கூடிய அனைத்து இயந்திர வகைகளும் இதில் அடங்கும்.

* சபை என்பது - தெரணியகலை பிரதேச சபை எனக் கருதப்படுகிறது.

* தலைவர் என்பது - தெரணியகலை பிரதேச சபை தலைவர்

* வாகன கட்டுப்பாட்டாளர் என்பது - பிரதேச சபையில் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரி

* பொலிஸ் அதிகாரி என்பது - சீருடை தரித்துள்ள பொலிஸ் அதிகாரி எனப்படுவது

* வாகனம் நிறுத்துதல் என்பது - பிரயாணிகள் ஏறுவது அல்லது இறங்குவது அல்லது பொருட்கள் ஏற்றுவது அல்லது பொருட்கள் இறக்குவதற்கு நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் வாகனங்களை குறிக்கும். ஏனைய வாகனங்கள் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் நிறுத்திவைக்கப்படல் வேண்டும்.

**அட்டவணை இல. 1**

**வாகனங்களை நிறுத்தப்படும் இடங்கள்**

1. தேவால சந்தியில் இருந்து வைன்ஸ் ஸ்டோர்ஸ் வரையும் வலப்பக்கம் (ஞாயிற்றுக்கிழமை தவிர)
2. தேவால சந்தியில் இருந்து சில்வா கடைவரையிலும் இடப்பக்கம் (ஞாயிற்றுக்கிழமை தவிர)
3. பிரதான பஸ் தரிப்பிட முன்பு - வேன் வாகனம் மாத்திரம் (ஞாயிற்றுக்கிழமை தவிர)
4. பொதுச்சந்தை விளையாட்டு மைதான அருகில் - எல்லா வகையான வாகனங்களும்
5. சிறிவர்தன மாவத்தை - எல்லா வகையான வாகனங்களும்

**அட்டவணை இல. 2**

**அனுமதிபெற்ற முச்சக்கரவண்டிகள் நிறுத்தும் இடங்கள்**

1. வைத்தியசாலைக்கு முன்னால் - தெஹியோவிட்ட தெரணியகலை வீதி இடது பக்கம்
2. பொதுச்சந்தை அருகில் - தெஹியோவிட்ட தெரணியகலை வீதி வலது பக்கம்
3. இலங்கை வங்கிக்கு முன்னால் - தெஹியோவிட்ட தெரணியகலை வீதி (வலது பக்கம்)
4. மியனவிட்ட பாதை - தெரணியகலையில் இருந்து மியனவிட்ட வீதி வரை
5. பிரதான பஸ் தரிப்பிடம் அருகில் நூரியில் இருந்து தெரணியகலை வீதி வரையானது
6. பெற்றோல் நிலையத்துக்கு அருகில் - தெஹியோவிட்ட தெரணியகலை வீதி இடது பக்கம்

**அட்டவணை இல. 3**

**சபையில் அனுமதிபெற்ற முச்சக்கரவண்டிகளுக்கு அறவிடப்படும் கட்டணங்கள்**

| | |
|---|---|
| வருடத்துக்கான கட்டணங்கள் (ஸ்டிகருடன்) | 250 0 |
| மாதாந்த அனுமதிப்பத்திரம் | 150 0 |

**அட்டவணை இல. 4**

**சபையில் அனுமதிபெற்ற வாகனம் தவிர்ந்த ஏனைய வாகனங்களுக்கு அறவிடப்படும் கட்டணங்கள்**

| வாகன வகை | அறவிடப்படும் கட்டணங்கள் ரூபா ச. |
|---|---|
| வேன் கார் பஸ்வண்டி மோட்டார் வாகனம் முச்சக்கர வண்டி | 30 0 |
| பஸ்வண்டி (இ. போ. ச. தவிர்ந்த ஏனைய வாகனங்கள் | 40 0 |
| வேறு மோட்டார் வாகனம் | 50 0 |
| மிதிவண்டி | 20 0 |

இந்த இடைக்கால யாப்பின்படி அம்பியுலன்ஸ் வண்டி, தீயணைக்கும் வண்டி, அரசாங்க திணைக்களத்தின் அரச வாகனம், பாடசாலை பிள்ளைகளுடன் செல்லும் வாகனங்களுக்கு பொருந்தாது.

1-535

## அரணாயக்க பிரதேச சபை

துணை விதிகள்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய அச்சட்டத்தின் 69 ஆம் பிரிவின்/126 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அரணாயக்க பிரதேச சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய மேற்கூறிய பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சபரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர் மஹீபால ஹேரத் ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதும் இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதி தொடக்கம் மேற்கூறிய துணைவிதிகள் அரணாயக்க பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் செயற்படும் என்பதும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

மஹீபால ஹேரத்,
உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர்,
சப்பிரகமுவ மாகாணம்.

சப்பிரகமுவ மாகாண சபை,
புதிய நகரம்,
இரத்தினபுரி,
2009.12.18.

### வாகனங்கள் நிறுத்தி வைத்தலைக் கட்டுப்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்பான துணை விதிகள்

1. 2004 ஆம் ஆண்டின் யூன் மாதம் 04 ஆந் திகதியையும் இலக்கம் 1344 யும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட அரனாயக பிரதேச சபையின் வாகனங்களை நிறுத்திவைத்தலைக் கட்டுப்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்பான துணைவிதிகள் இத்துணைவிதிகள் நடைமுறைக்கு வரும் தினத்திலிருந்து செல்லுபடியற்றதாகின்றன.

2. இத்துணைவிதிகள் அரணாயக்க பிரதேச சபை அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசங்களில் வாகனங்களை நிறுத்திவைப்பதற்கான இடங்களை ஒதுக்கிக்கொள்ளல் மற்றும் அவ்விடங்களில் வாகனங்களை நிறுத்திவைப்பதற்கான கட்டணங்களை அறவிட்டுக்கொள்ளல் மற்றும் வாகனங்களை நிறுத்திவைத்தலைக் கட்டுப்படுத்தல் சம்பந்தமான துணைவிதிகள் என அறிமுகஞ் செய்யப்படுகின்றன.

3. இங்கு இதனைத் தொடர்ந்து தலைவர் என அறிமுகப்படுத்தப்படும் அரணாயக்க பிரதேச சபைத் தலைவர் ஒருவரினால் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் வாகனங்களை நிறுத்தி வைத்தல் அல்லது நிறுத்தி வைப்பதை தடை செய்தல் அல்லது வரையறுத்தல் இல்லாவிடின் கட்டுப்படுத்தும் எந்தவொரு வீதியில், வீதிப்பகுதியில் வாகனங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏதாவது வாகனங்களை நிறுத்துவதற்குரிய இடங்களைக் குறிப்பிடுகின்ற அறிவித்தல் ஒன்று அந்த வீதியில் அல்லது வீதிப்பகுதி ஒன்றில் எல்லோருக்கும் தெரியும் வகையில் ஓரிடத்தில் காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

4. இந்த மூன்றாவது நிபந்தனையில் காட்டப்பட்டுள்ள அறிவித்தல் ஒன்றின் மூலம் வாகனங்களை நிறுத்தி வைத்தல் அல்லது நிறுத்தி வைப்பது தடைசெய்யப்பட்டுள்ள ஒரு சந்தர்ப்பத்தில் வாகனச் சாரதி ஒருவரினால் :-

(i) யாராயினும் ஒரு உத்தியோகத்தரினால் அல்லது அதிகாரியினால் அந்த வீதியில் அல்லது வீதிப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அல்லது காட்சிப்படுத்தப்பட்டுள்ள யாதாயினும் வாகன சமிக்ஞைகளுக்கு அல்லது அறிவித்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளாமல்; அல்லது

(ii) அவ்வீதியில் அல்லது வீதிப்பகுதியில் அவ்வேளையில் நிகழும் யாதாயினும் வாகனப் போக்குவரத்து ஒழுங்குமுறைகளை சரியான முறயைில் மேற்கொள்ளாதிருத்தல் ; அல்லது

(iii) யாராயினும் ஒருவர் அவ்வாகனத்தை விட்டு இறங்குதல் அல்லது அவ்வாகனத்திற்கு ஏறுவதற்கு இடமளித்தல் ; அல்லது

(iv) அந்த வாகனத்திற்கு பொருட்களை ஏற்றுதல் அல்லது வாகனத்திலிருந்து பொருட்களை இறக்குதல் அல்லது காரியங்களுக்கு தேவையான நேரத்தைத் தவிர அவ்வாகனத்தை வீதியில் அல்லது வீதிப்பகுதியில் நிறுத்திவைப்பதற்கு ஒழுங்குபடுத்துவதற்கு இடமளித்தல் ஆகாது.

5. இந்த துணை விதிகளின் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களைச் செலுத்திய பின்பு தலைவரினால் விநியோகிக்கப்படும் உத்தரவுப் பத்திரம் ஒன்று தம்மிடத்தில் காணப்படுவது தவிர, அல்லது யாராலும் ஒருவரினால் இத் துணைவிதிகளின்

முதலாவது அட்டவணையில் மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடம் ஒன்றில் தமது மோட்டார் வாகனத்தை நிறுத்தி வைத்தல் ஆகாது.

6. இந்த துணை விதிகளின் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களும் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மோட்டார் வாகனங்கள் நிறுத்தப்படக்கூடிய இடங்களும் சபையின் பிரேரணைகள் மூலமாக தீர்மானிக்கப்பட்டு, வர்த்தமானப்பத்திரிகையில் பிரசுரிக்கப்படுவதன் மூலம் காலத்துக்குக் காலம் திருத்தியமைக்கப்படுவதற்குரிய அதிகாரம் சபைக்குரியதாகும்.

7. இத்துணை விதிகளின்கீழ் விநியோகிக்கப்படும் எல்லா உத்தரவுப் பத்திரங்களும் அவ்வுத்தரவுப்பத்திரம் விநியோகிக்கப்பட்டது மோட்டார் வாகனம் சம்பந்தமாக என்பதனால் அம்மோட்டார் வாகனத்தை அறிந்து கொள்வதற்கான இலக்கம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருப்பதுடன் உத்தரவுப்பத்திரத்தின் கால வரையறைக்குரிய காலம் வரை மாத்திரம் செல்லுபடியாகும்.

8. இந்த துணை விதிகளின் கீழ், உத்தரவுப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளும் எல்லா நபர்களும் அவ்வுத்தரவுப்பத்திரம் வெளியே தெரியக்கூடிய விதமாக வாகனத்தின் உள்ளே தெளிவாக தெரியக்கூடிய இடத்தில் காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

9. பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், வாகனங்கள் கட்டுப்பாட்டாளர் ஒருவர், பிரதேச சபைத் தலைவர் மற்றும் அதிகாரம் பெற்ற ஒருவரால் ஒரு பொது இடத்தில் வாகனங்களை நிறுத்தப்பட்டுள்ள யாராயினும் ஒரு உரிமையாளரிடம் அல்லது சாரதியிடம் அம்மோட்டார் வாகனத்திற்கான விநியோகிக்கப்பட்ட உத்தரவுப்பதிரத்தைப் பரிசோதிப்பதற்காக முன்வைக்குமாறு கேட்கப்படும் எந்த ஒரு வேளையிலும் அவ்வுத்தரவுப்பத்திரம் உரிமையாளரினால் அல்லது சாரதியினால் முன்வைக்கப்படல் வேண்டும்.

10. வாகனங்களை நிறுத்தப்படும் எந்த ஒரு பொது இடத்திலும் யாதாயினும் ஒரு குறிப்பிட்ட வகுப்புக்கு அல்லது வகைக்கு அல்லது மோட்டார் வாகனங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள போது, யாராயினும் ஒரு நபரினால் அவ்வகுப்புக்கு அல்லது வகைக்கு உரித்துடையதல்லாத மோட்டார் வாகனம் ஒன்றை நிறுத்தி வைத்தல் ஆகாது.

11. வாகனங்களை நிறுத்தி வைக்கப்படும் ஒரு பொது இடம் ஒன்றில் நுழையும் அல்லது அங்கு வெளியாகும் இடங்களில் அல்லது வேறு யாதாயினும் ஒரு வாகனத்திற்கு தடைகள் ஏற்படும் வகையில் யாராயினும் ஒருவரினால் வாகனத்தை நிறுத்தி வைக்கப்படல் ஆகாது.

12. வாகனங்களை நிறுத்தி வைக்கப்படுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒரு பொது இடத்திற்கு உட்செல்வதற்கும் மற்றும் வெளியேறுவதற்கும் வேறு பாதை வசதிகள் ஒழுங்கமைக்கப்பட்டு அறிவித்தல் அல்லது சமிக்ஞை பலகைகளின் மூலம் காட்சிப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், குறிப்பிடப்பட்ட பாதை வழியாகவன்றி யாதாயினும் ஒரு மோட்டார் வாகனம் அவ்விடத்திற்கு உட்செலுத்தப்படுவதோ அல்லது வெளிச்செலுத்தப்படுவதோ ஆகாது.

13. சங்கிலிகள் அல்லது தூண்கள் அல்லது சங்கிலிகளும் தூண்களும் என்று இரு வகையினாலும், வழங்கப்பட்டு வாகனங்களை நிறுத்தி வைக்கப்படும் ஒரு பொது இடத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் எல்லா மோட்டார் வாகனங்களும், அவை வந்து சேர்ந்த ஒழுங்கு முறைகளுக்கு ஏற்ப, ஒவ்வொன்றும் ஒழுங்கு முறையாக ஒரே பக்கமாக முகப்பக்கம் இருக்குமாறு நிறுத்தி வைக்கப்படுவதுடன், முன்னால் இடைவெளி இருக்குமாறு ஒழுங்கு வரிசைக்கு ஏற்ப இலக்க வரிசைப்படி வாகனங்கள் முன்னால் கொண்டு செல்லப்படுதல் வேண்டும்.

14. மோட்டார் வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ள ஒரு பொது இடத்தில், மோட்டார் வாகனமொன்று நிறுத்தப்பட்டிருக்கும்போது யாராயினும் ஒருவரினால் அவ்வாகனத்தை கழுவுவது அல்லது கழுவுவதற்கு ஒழுங்கு செய்வது ஆகாது.

15. யாராயினும் ஒருவரினால் வாகனங்கள் நிறுத்தப்பட்டிருக்கும் ஒரு பொது இடத்திலிருந்து ஒரு மோட்டார் வாகனத்தை அகற்றிக் கொள்வதற்கு திருத்த வேலைகள் செய்து கொள்ள அவசியப்படும் நிலை தவிர வாகனங்கள் நிறுத்தப்பட்டிருக்கும் பொது இடம் ஒன்றில், நிறுத்தப்பட்டிருக்கும் யாதாயினும் வாகனமொன்றில் திருத்த வேலைகள் செய்தல் ஆகாது.

16. மோட்டார் வாகனமொன்று நிறுத்தப்படும் இடம் ஒன்றில் யாராகிலும் ஒருவரினால் போதைப் பொருட்கள் பாவனை அல்லது விற்பனை செய்தல் அல்லது ஒழுங்கற்ற முறையில் நடந்து கொள்ளல் ஆகாது.

17. இத்துணை விதிகள் ஒவ்வொரு நாளும் காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை செயற்பாட்டில் இருக்கும். இக்கால வரையறை தலைவரினால் வர்த்தமானப் பத்திரிகையில், வெளியிடப்படும் அறிவித்தல் ஒன்றின் மூலம் மாற்றஞ் செய்யப்பட்டு திருத்தப்பட முடியும்.

18. வேறு விஷேட விடங்களுக்காக, நிரந்தர கூலி வாகனங்கள் நிறுத்தப்பட்டிருக்கும் இடங்களை பாவனைக்கு எடுத்துக்கொள்ளல், அல்லது தலைவரினால் வழங்கப்படும் விஷேட உத்தரவுப்பத்திரத்தின் மூலம் விஷேட சந்தர்ப்பங்களில், அவ்விடங்களில் வேறு விடயங்களுக்காக மோட்டார் வாகனங்கள் நிறுத்தப்படுவதும் சட்டநெறிக்குட்பட்டதாகும்.

19. குறிப்பிட்ட விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து வருடாந்த உத்தரவுப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் குறிப்பிட்ட வருடத்தின் முதலாம் மாதத்தின் முதலாம் திகதிக்கு முன்பு இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குறிப்பிட்ட கட்டணத்தை செலுத்தி உத்தரவுப்பத்திரத்தைப் புதுப்பித்துக்கொள்ளல் வேண்டும்.

20. இத்துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள யாதாயினும் நிபந்தனை ஒன்று மீறப்படுவது, அல்லது நிறைவேற்றப்படாதுவிடின் குற்றமாகக் கருதப்படுவதுடன், யாராயினும் ஒருவர் சரியான நீதிமன்ற அதிகாரத்துடன் நீதிமன்றம் ஒன்றினால் குற்றம் ஒன்றிற்காக குற்றவாளியாக

காணப்படும் இடத்து அத்தோடு மீறல் மேலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்தைக் கொண்ட பிரதேச சபைச் சட்டத்தின் 122 (2) ஆம் இலக்க நிபந்தனையின் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் தண்டனைக் உட்பட்டதாகும்.

21. இத்துணை விதியில் வேறு பொருட் கருத்து தேவைப்பட்டாலன்றி மோட்டார் வாகனம் என்பதனால் குறிப்பிடப்படுவது லொறியொன்று ரயிலர் பொருத்தப்பட்ட உழவு இயந்திரம், முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள் வேறு இயந்திரமொன்றினால் பிரயாணம் செய்யக்கூடிய வேறு எந்தவொரு வாகனமும் இவ்வகைக்கு உட்பட்டதாகும்.

சபை, என்பது அரநாயக்க பிரதேச சபை என பொருள்படும்.
தலைவர், என்பது அரநாயக்க பிரதேச சபை தலைவர் என பொருள்படும்.
வாகன கட்டுப்பாட்டாளர், என்பது சபையினால் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரமுடைய உத்தியோகத்தர் என பொருள்படும்.
பொலிஸ் அதிகாரி, என்பது பொலிஸ் திணைக்களத்திற்குரிய பொலிஸ் அதிகாரியைக் குறிக்கிறது.

**அட்டவணை 1**

| வாகனங்கள் நிறுத்துவதற்கு | முச்சக்கர வண்டி | டிராக்டர் (உழவூர்தி) | வேன் | லொறி (பார ஊர்தி) | மோட்டார் சைக்கிள் (உந்துருளி) |
|---|---|---|---|---|---|
| திப்பிட்டிய நகரம் | பொதுச்சந்தைக்கு முன்னால் ஹெம்மாதகம பேரூந்து தரிப்பிடத்துக்கு அருகில் (இலங்கை வங்கிக்கு அருகாமையில்), வில்பொல சந்தி மேனம சந்தி வைத்தியசாலைச் சந்தி | திப்பிட்டிய தல்கஸ்பிட்டிய வீதியிலிருந்து வைத்தியசாலை நோக்கி | 1. பொதுச் சந்தைக்கு முன்னால் 10 வேன்கள் 2. வெலிகம வடக்கு முன்னால் 3. மீன் வேன்-பொதுச் சந்தைக்குப் பின்புறமாக | | |
| கெவிலிபிட்டிய நகரம் | தெபத்தகம வீதி அருகில், எஸ். ஓ. வர்த்தக நிலையத்துக்கு முன்னால் காலே கடை சந்தியில் நாரங்கம்மன வீதிக்கு அருகில் | | | | |
| பொல்அம்பேகொட | நிகபிட்டிய வீதி (விகாரைக்கு முன்னால்), கொடிகமுவ வீதிக்கு முன்னால், பொல்அம்பேகொட பெஹேனிபெத்தர சந்தி | | | | |
| அலுபொதை | லீலாகம வீதி சந்திக்கு அருகில் அட்டாபிட்டிய சுமனதிஸ்ஸ மாவத்தைக்கு அருகில் | | | | |
| உஸ்ஸாபிட்டிய | பிரதேச சபை வர்த்தகத் தொகுதிக்கு முன்னால், சணச வங்கிக் கட்டிடத்திற்கு முன்னால், கல்லதர வீதி சந்திக்கு அருகில், 8 ஆவது மைல் கல் சந்தி அருகில், சூதுகல வீதிச் சந்திக்கு அருகில் | துத்திரிபிட்டிய பேரூந்துத் தரிப்பிடத்திலிருந்து கல்லதர வீதி நோக்கி | உடவத்த கடைக்கு முன்புறமாக | கல்லதர வீதி | |
| அரவுபொல | அரவுபொல தஸநாயக்க கடைக்கு முன்னால் | | | | |
| துத்திரிபிட்டிய | துத்திரிபிட்டிய சந்தி யாலபொல சந்தி வாகிரிகல அம்பலத்துக்கு அருகில் | | | | |
| அஸ்மடல | அஸ்மடல குருபெவில வீதிக்கு அருகில் (கிரா அம்பே கடை வீதிக்கு முன்னால்) | | | | |

| வாகனங்கள் நிறுத்துவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள் | முச்சக்கர வண்டி | டிராக்டர் (உழவூர்தி) | வேன் | லொறி (பார ஊர்தி) | மோட்டார் சைக்கிள் (உந்துருளி) |
|---|---|---|---|---|---|
| அரனாயக்க | ஹொரேவல நகரம் (இறப்பர் கடைக்கு முன்புறமாக),<br>அரணாயக்க நகரம் (அரச மரத்துக்கு முன்புறமாக),<br>தபாற் கந்தோருக்கு முன்புறமாக,<br>உக்கொட சந்தி (பாலத்துக்கு அருகில்) | | | | |
| அம்பலகந்த | அம்பலகந்த பாடசாலைக்கு முன்புறமாக அரச மரத்துக்கு அருகில் | | | | |
| கந்துன | கந்துன உடகம பேரூந்துத் தரிப்பிடத்துக்கு முன்புறமாக, (பாலத்துக்கு அருகில்),<br>தோதல்ஓயா வீதி சந்தி (ஹுலங்கபொல்ல சந்தி), கந்துன வீதியில் நாரங்கல ஆச்சிரமத்துக்கு அருகில் | | | | |
| ரஹல | பண்டாரவத்த சந்திக்கு அருகில்<br>பூவலிகட சந்தி<br>சலவ கூட்டுறவுக்கடை அருகில் | | | | |
| ரந்திலிகம | ரந்திலிகம வீதியின் சந்திக்கு அருகில்,<br>புவலிகட சலவ வீதி சந்திக்கு அருகில் | | | | |
| வெலிமன்ன | வெலிமன்ன கெடபேரிகந்த வீதிக்கு அருகில் | | | | |
| கல்பொக்க | கல்பொக்க வீதிக்கு அருகில் | | | | |
| மோராகம்மன | மோராகம்மன சந்திக்கு அருகில் | | | | |
| ஹத்கம்பொல | ஹத்கம்பொல எலங்கபிட்டிய வீதி சந்திக்கு அருகில்.<br>ஹத்கம்பொல பாடசாலை சந்திக்கு அருகில். | | | | |
| தெபத்கம | தெபத்கம நகர கலுகல வீதி சந்திக்கு அருகில்<br>தெபத்கம பன்சலைக்கு அருகில் | | | | |
| தல்கஸ்பிட்டிய | தலாவ வீதி டபல்போக்குக்கு அருகில்.<br>ஹபலக்காவ கூரகல சந்திக்கு அருகில். | | | | |
| தெவனகல | தெவனகல சந்தி,<br>தெவனகல ரஜமகா விகாரைக்கு திரும்பும் இடம் | | | | |
| தெல்லெக | தெல்லெக சாமகம சந்திக்கு அருகில் | | | | |
| கால்வான | கால்வான புத்தர் சிலைக்கு அருகில் | | | | |
| கெசெல்வத்த | பாடசாலை சந்திக்கு அருகில் | | | | |

(அரணாயக்க பிரதேச சபையினால் முச்சக்கர வண்டிக்கென ஒதுக்கப்பட்டுள்ள தரிப்பிடங்கள் சந்தர்ப்பத்திற்கேற்ப மாற்றியமைக்கப்படக்கூடும் (வீதி அபிவிருத்தி மற்றும் நகரத் திட்டமிடலின் போது).

**அட்டவணை 2 (ஆ)**

| மோட்டார் வாகன வகை | அறவிடப்படும் தொகை | ஒட்டு லேபலுக்கான கட்டணம் (ஸ்டிகர்) |
|---|---|---|
| முச்சக்கர வண்டிகள் | வருடாந்தம் ரூ. 250 | ரூ. 50 |
| வேன்/மோட்டார் வாகனம்/டிரக்டர்/லொறி | மாதாந்தம் ரூ. 200 | |

தலைவர்,
அரணாயக்க பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அரணாயக்க,
2009.11.24 ஆந் திகதி.

1-536

---

**ரம்புக்கனை பிரதேச சபை**

துணை விதிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய அச்சட்டத்தின் 69 ஆம் பிரிவின்/126 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் ரம்புக்கன பிரதேச சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய மேற்கூறிய பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சபரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர் மஹீபால ஹேரத் ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதையும் இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதி தொடக்கம் மேற்கூறிய துணைவிதிகள் ரம்புக்கன பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் செயற்படும் என்பதையும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மஹீபால ஹேரத்,
உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர்,
சப்பிரகமுவ மாகாணம்.

சப்பிரகமுவ மாகாண சபை,
புதிய நகரம்,
இரத்தினபுரி,
2009.12.18.

**ரம்புக்கனை பிரதேச சபையின் எல். பீ. வாயு மூலம் செயற்படுகின்ற தகனம் செய்யுமிடத்தினை ஒழுங்காக நடாத்துதல் சம்பந்தமான துணைச்சட்டம்**

1. இது ரம்புக்கனை பிரதேச சபையின் எல். பீ. வாயு மூலம் செயற்படுகின்ற தகனம் செய்யுமிடத்தினை கட்டுப்படுத்தல் மற்றும் ஒழுங்காக செயற்படுத்துவதற்கு விதிக்கப்படும் துணைச்சட்டமாகும். வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினம் முதல் இது அமுல்படுத்தப்படும்.

2. ரம்புக்கனை பிரதேச சபையினால் நடாத்தப்படுகின்ற இத்தகனம் செய்யுமிடம் எல். பீ. வாயு மூலம் செயற்படுகின்ற ரம்புக்கனை பிரதேச சபையின் சவம்களை தகனம் செய்யுமிடமென அறிமுகப்படுகின்றது.

3. ரம்புக்கனை பிரதேச சபைத் தலைவரினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு அலுவலரினால் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரமின்றி சபைக்குச் சொந்தமான தகனம் செய்யுமிடத்தில் எவருடைய சவத்தையும் தகனம் செய்தல் கூடாது.

4. இங்கு மூன்றாம் துணைச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரமொன்றினைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்ற இங்கு இதன்பின் விண்ணப்பதாரர் எனக் குறிப்பிடப்படுகின்ற ஒரு நபரினால் இங்கு முதலாம் அட்டவணைக்கேற்பத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவமொன்றினை கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் தலைவருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) இறந்தவர் மற்றும் விண்ணப்பதாரருக்கிடையிலான தொடர்பினை உறுதிசெய்வதற்காக மரணமான நபர் வசித்த கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட இறப்புச் சான்றுப்பத்திரம்.

(ii) இறந்தவரின் மரணம் சம்பந்தமாக குற்றவழக்கு ஏற்பாட்டு விதிக்கோவையின் கீழ் ஒரு விசாரணை நடைபெற்றிருந்தால் விசாரணையை நடாத்திய மரண விசாரணை அதிகாரி அல்லது நீதிபதியினால் இறப்பு மற்றும் பிறப்புப் பதிவுச் சட்டத்தின் 41 (இ) பிரிவின்கீழ் இறந்த உடல்களைத் தகனம் செய்வதற்காக அனுமதி வழங்கப்படுகின்ற சான்றிதழ்.

(iii) உயிரற்றுப் பிறந்த ஒரு சவமாக இருந்தால் பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச்சட்டத்தின் 43.1 ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட சான்றிதழ்.

5. பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை தலைவருக்கு ஒப்படைத்ததன் பின் அவைகள் கிடைத்ததன் பிரகாரம் பட்டியல் படுத்தப்படுதல் வேண்டும்.

6. சவத்தினை தகனம் செய்வதற்காக ஒப்படைப்பதாக இருந்தால் அதற்காகக் குறித்த கட்டணம் மற்றும் ரூபா 1,000 வைப்புப்பணத்தினையும் அறவிட்டு அனுமதிப்பத்திரத்தினை விண்ணப்பதாரிக்கு வழங்குதல் வேண்டும். தகனம் செய்யுமிடப் பொறுப்பாளரிடம் சவத்தினை ஒப்படைக்கவேண்டிய நேரத்தினையும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.

7. சவத்தினை தகனம் செய்வதற்காக ஏற்றுக்கொள்ள முடியாதவிடத்து அதற்கான காரணங்களுடன் விண்ணப்பதாரிக்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்.

8. சபையில் கடமையாற்றிய அல்லது தற்போது கடமையாற்றுகின்ற அல்லது எவரேனும் ஒரு தலைவர் அல்லது உப தலைவர் அல்லது பிரதேச சபை உறுப்பினர் அல்லது சபை சேவகரின் சவத்தினை தகனம் செய்வதற்காக கட்டணங்கள் அறவிடப்படமாட்டாது.

9. சபையின் மூலம் தேவைக்கேற்றவாறு பிரேரணை ஆமோதிப்பு மூலம் தீர்மானிக்கப்படுகின்ற கட்டணத்தினை அறவிட்டதன் பின் சவத்தினை தகனம் செய்யுமிடத்தில் தகனம் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்குதல் வேண்டும்.

10. தலைவரை விசாரித்து தகனம் செய்யுமிடப் பொறுப்பாளர் ஒருவரை, உதவியாளர் ஒருவரை மற்றும் பாதுகாவலர் ஒருவரை சப்பிரகமுவ மாகாண சபையினால் நியமித்தல் வேண்டும்.

11. தகனம் செய்யுமிடப் பொறுப்பாளர் தகனம் செய்யுமிடத்தினையும் அதன் சூழலையும் சுத்தமாகவும் அழகாகவும் பேணுதல் வேண்டும்.

12. 1975 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க விவாக, பிறப்பு மற்றும் இறப்பு (திருத்தப்பட்ட) சட்டத்தில் திருத்தப்பட்ட பிறப்பு, இறப்பு பதிவு செய்யும் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி பிறப்பு, இறப்பு பதிவாளர் ஒருவரினால் வழங்கப்பட்ட இறப்பைப் பதிவு செய்யும் அத்தாட்சிப்பத்திரம் அல்லது சம்பந்தப்பட்ட பிரிவின் கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட அத்தாட்சிப்பத்திரமின்றி எச்சவத்தினையும் தகனம் செய்தல் கூடாது.

13. சவம் ஒன்றினை தகனம் செய்வதற்காக தகனம் செய்யுமிடத்தினை ஒதுக்கும்போது சவத்தினை தகனம் செய்ததன் பின் அஸ்தியை சேகரித்து வைப்பதற்காக மரணித்தவரின் பெயர் மற்றும் முகவரி குறித்த பாத்திரமொன்றினை மரணித்தவரின் நெருங்கிய உறவினர்களினால் தகனம் செய்யுமிடப்பொறுப்பாளரிடம் வழங்குதல் வேண்டும்.

14. தகனம் செய்யப்பட்ட அஸ்தியானது (சாம்பல்) 13 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்ட சட்ட விதிகளுக்கேற்ப ஒப்படைக்கப்பட்ட பாத்திரத்திலிட்டு, கவனமாக சுபகாரியத்திற்காக வேறுபடுத்தியுள்ள பாகத்தில் அல்லது நிலத்தில் தகன நிலையப் பொறுப்பாளரால் வைக்கப்படல் வேண்டும்.

15. தகனம் செய்யுமிடத்திலிருந்து அகற்றப்படுகின்ற அஸ்தியுடனான பாத்திரம் 14 நாட்களுக்குள் மரணித்தவரின் உறவினர்களினால் எடுத்துச்செல்லப்படாவிட்டால் அல்லது 13 ஆம் துணைச்சட்டத்தின் படி பாத்திரமொன்று வழங்கப்படாவிட்டால் குறித்த அஸ்தியினை அவ்விபரத்திற்காக மயானத்தில் ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் சபையினால் அடக்கம் செய்யப்படுதல் வேண்டும்.

16. தகனம் செய்யுமிடத்திலிருந்து அகற்றப்படுகின்ற அஸ்தி மரணித்தவரின் நெருங்கிய உறவினர் அல்லாத எந்த நபருக்கும் வழங்குதல் கூடாது.

17. தகனம் செய்வதற்காக சவம்கள் மு. ப. 6.30 மணி முதல் இரவு 8.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

18. தலைவர் மற்றும் செயலாளரினால் வழங்கப்படுகின்ற கடமைப்பட்டியலுக்கேற்ப தகனம் செய்யுமிடப் பொறுப்பாளர் பணியாற்றுதல் வேண்டும்.

19. சமாதானத்திற்கு மற்றும் தகன நடவடிக்கைகளுக்கு இடைஞ்சல்கள் ஏற்படுத்தும் வகையில் எவரேனும் ஒரு நபர் நடந்துகொண்டால் தகனம் செய்யுமிடப் பொறுப்பாளருக்கு குறித்த நபரை தகனம் செய்யுமிட வளவில் இருந்து அகற்றுவதற்கு அதிகாரம் உண்டு.

20. மரணித்தவருக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்கு வருகைதரும் எவரும் மயானத்தில் எந்த சமாதிக்கும், அல்லது தகனம் செய்யுமிடக் கட்டடங்கள், சொத்துக்களுக்கு நட்டங்கள் ஏற்படும் வகையில் அல்லது மரணித்தவர்களுக்கு அவமரியாதை ஏற்படக்கூடிய வகையில் நடத்தல் கூடாது.

21. 20 ஆவது பிரிவுக்கான விதியை மீறும் யாரேனும் அல்லது நபருக்கு மயான பூமிகள் கட்டளைச்சட்டத்தின் சட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப சட்டநடவடிக்கை செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

22. தகனம் செய்யுமிட வளவுக்கு இங்கு 17 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களில் அல்லாமல் முறையான அனுமதி பெறாமல் எவரும் உற்செல்லல் கூடாது. தகன நடவடிக்கைகளின் பின் எவரும் தேவையில்லாமல் அங்கு நடத்தல் அல்லது நேரத்தைக் கடத்துதல் கூடாது.

23. தகனம் செய்யுமிடத்திற்கு அல்லது தகனம் செய்யுமிட வளவுக்குள் இருக்கின்ற ஒரு நிர்மானத்திற்கு அல்லது பொருத்திற்கு எவையேனும் நட்டங்களை அல்லது சேதத்தினை ஏற்படுத்தல் அல்லது தகனம் செய்யுமிடத்தில் சேவை செய்கின்ற பொறுப்பாளர், உதவியாளர் அல்லது சேவையாற்களின் சேவைகளுக்கு இடைஞ்சல்கள் செய்தல் அச்சுறுத்தல் அல்லது வற்புறுத்தல்கள் செய்தல் குற்றமாகும்.

24. தகனம் செய்யுமிடத்தினை ஒதுக்குபவர்களினால் அல்லது அவர்களின் உதவியாளர்களினால் அங்கு எவையேனும் ஒரு சொத்திற்கு அல்லது கட்டடத்திற்கு அல்லது உபகரணத்திற்கு நட்டமொன்றேற்பட்டால் தலைவர் விதிக்கின்ற மதிப்பீட்டுத் தொகையைச் செலுத்துவதற்கு தகனம் செய்யுமிடத்தினை ஒதுக்குபவர்கள் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

25. இந்தத் துணைச்சட்ட யாப்பின் 22, 23 மற்றும் 24 ஆம் சட்ட விதிகள் மீறப்படுவது குற்றச்செயலாகும் அத்தோடு அது சம்பந்தமாக யாரேனும் ஒருவர் சட்டபூர்வமாக அதிகாரம் உள்ள நீதிமன்ற நீதிபதியினால் குற்றவாளியாகக் காணப்பட்டவிடத்து 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 122 (2) ஆம் பிரிவு சட்ட விதிமுறைக்கமைய தண்டனைக்குரியவராவார்.

26. ஒரு சவத்தினைத் தகனம் செய்வதற்காக தகனம் செய்யுமிடத்திற்கு ஒப்படைத்ததன் பின் தகனம் செய்தல் இடையில் அல்லது தகனம் செய்யுமுன் தகனம் செய்யுமிட இயந்திரங்களின் கோளாறுகள். மின்வெட்டுக்கள் மூலம் முடியாது போகுமிடத்து குறித்த சவத்தினை அடக்கம் செய்யும் அதிகாரம் சபையின் தலைவருக்கு உரித்துடையதாகும். இத்துணைச்சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் ஏதேனும் ஒரு பிரச்சினையின்போது தலைவரின் தீர்மானம் இறுதியானதாகும்.

27. சொற்கள் சம்பந்தமாக விளக்கங்கள் தேவைப்பட்டாலன்றி இத்துணைச்சட்டங்களின் சபை என்பது ரம்புக்கனை பிரதேச சபையும், தலைவர் என்பவர் ரம்புக்கனை பிரதேச சபைத் தலைவரும், செயலாளர் என்பவர் ரம்புக்கனை பிரதேச சபைச் செயலாளரும், சவம் என்பது மனிதரின் மரணித்த உடல்களும் எனப் பொருள்படும்.

28. இத்துணைச் சட்டங்களில் தமிழ் மற்றும் ஆங்கிலப் பிரதிகள் பொருந்தாத எவையேனும் சந்தர்ப்பங்களில் சிங்களம் பிரதி வழுவுடையதாய் இருத்தல் வேண்டும்.

### அட்டவணை - 01

### ரம்புக்கனை பிரதேச சபையின் தகனம் செய்யுமிடத்தில் சவம்களை தகனம் செய்வதற்கான விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :----.
முகவரி :----.
தேசிய அடையாள அட்டை இல. :----.
கிராம அலுவலர் பிரிவு :----.

2. இறந்தவரின் பெயர் :----.
வசித்த முகவரி :----.
கிராம அலுவலர் பிரிவு :----.
தேசிய அடையாள அட்டை இல. :----.

3. இறந்தவருக்கும் விண்ணப்பதாரிக்கும் இடையிலான தொடர்பு :----.

4. இறப்புச் சான்றிதழின் இலக்கமும் திகதியும் :----.
(இறப்புச் சான்றிதழின் நிலம் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)

5. இறப்பைப் பதிவு செய்த பதிவாளரின் பெயரும் முகவரியும் :----.

6. இறப்பு ஏற்பட்ட விதம் :----.

7. இறப்பு சம்பந்தமாக விசாரணை நடைபெற்றிருந்தால் திகதியும் நேரமும் :----.

8. விசாரணை அலுவலரின் பெயரும் பதவியும் :----.

9. விசாரணை அலுவலரின் தீர்மானம் :----.

*10. சவத்தைத் தகனம் செய்ய அனுமதி வழங்கப்படுமா? :----.*

*11. தகனம் செய்யவேண்டிய திகதியும் நேரமும் :----.*

*12. தகனம் செய்ததன் பின் அஸ்தியை வைப்பதற்காக பெயர் மற்றும் முகவரி குறித்த பாத்திரம் வழங்கப்பட்டிருந்தது/இல்லை*

*மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன். சம்பந்தப்பட்ட சான்றிதழ்கள் இணைக்கப்பட்டுள்ளன.*

----,
*விண்ணப்பதாரியின் பெயர்.*

*திகதி :----.*

***அலுவலக உபயோகத்திற்காக :***

*அனுமதிப்பத்திரம் வழங்குதலை அனுமதிக்கின்றேன்/அனுமதிக்கவில்லை. கீழே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் காரணமாக அனுமதிப்பத்திரம் வழங்குவதை மறுக்கின்றேன்.*

(i)
(ii)
(iii)

----,
*கையொப்பம்*
*தலைவர்/அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்.*

*திகதி :----.*

*தலைவர்/அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்*

*1. இடாப்பில் பதியப்பட்டது ............................ திகதி இலக்கம் ....................................... பற்றுச்சீட்டின் மூலம் ரூபா ............. மற்றும் வைப்பு ரூபா ................ அறவிடப்பட்டது.*

*02. அனுமதிப்பத்திரத்திற்காக கையளிக்கின்றேன்.*

*03. விண்ணப்பத்தினை மறுப்பதற்கான விபரங்கள் அடங்கிய ஆவணங்களை கையொப்பமிடுவதற்காக கையளிக்கின்றேன்.*

----,
*கையொப்பம்.*

*திகதி :----.*

*1-537*

---

## வரக்காபொல பிரதேச சபை

### துணை விதிகள்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய அச்சட்டத்தின் 69 ஆம் பிரிவின்/126 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வரக்காபொல பிரதேச சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய மேற்கூறிய பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயம்*

பொறுப்பான அமைச்சர் மஹீபால ஹேரத் ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதையும் இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதி தொடக்கம் மேற்கூறிய துணைவிதிகள் வரக்காபொல பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் செயற்படும் என்பதையும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மஹீபால ஹேரத்,
உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர்,
சப்பிரகமுவ மாகாணம்.

சப்பிரகமுவ மாகாண சபை,
புதிய நகரம்,
இரத்தினபுரி,
2009.12.18.

**வாகனங்களின் நிறை மற்றும் வேகத்தைக் கட்டுப்படுத்தல் மற்றும் ஓட்டத்தை ஒழுங்கமைத்தல் சம்பந்தமான துணைச்சட்டம்**

1. இத்துணைச்சட்டம் சபை வீதிகளில் ஓடும் வாகனங்களின் நிறை மற்றும் வேகத்தை கட்டுப்படுத்தல் மற்றும் ஒழுங்கமைத்தல் சம்பந்தமான துணைச்சட்டமென அறிமுகப்படுத்தப்படுகின்றது.

2. வரக்காபொல பிரதேச சபையின் பிரதேச சபை வீதியெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மற்றும் ஏனைய அதிகார சபைகளுக்குச் சொந்தமற்ற பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள வீதிகளில் கனரக வாகனங்களின் போக்குவரத்தினை ஒழுங்கமைத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், ஓட்ட வேகம் மற்றும் நிறை எல்லைகளை விதித்தல் மற்றும் வீதிகளுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்தல், இத்துணை விதியை விதிப்பதன் குறிக்கோளாகும்.

3. (1) இதன் பின் பிரதேச சபையின் தலைவரினால் வெளியிடப்பட்டுள்ள முதலாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கட்டணங்களைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதிப்பத்திரத்தை வைத்திருந்தால் அன்றி, மேலே இரண்டாம் பிரிவின் மூலம் விளக்கப்பட்டுள்ள வீதியொன்றில் நிறை இரண்டு டொன்களைவிடக் கூடுதலான டிப்பர் வண்டி, லொறி வண்டி, உழவு இயந்திரம், வீதி நிர்மாணம் செய்யும் இயந்திரம் ஓட்டுதல் அல்லது கல் மணல் போன்ற அனைத்துக்கட்டடப் பொருட்களை அல்லது ஏனைய கனிப்பொருட்கள் அல்லது இறப்பர் சம்பந்தப்பட்ட உற்பத்திகளைப் போக்குவரத்து செய்தல் கூடாது. மேலும் இப்பாதைகளினூடாக மிருகங்களைக்கொண்டு அல்லது உழவு இயந்திரங்கள் மூலம் மரக்குற்றிகளை அல்லது ஏனைய பொருட்களை இழுத்துச் செல்லுதல் கூடாது.

(2) இத்துணைச்சட்டத்தில் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களை தேவைக்கேற்றவாறு திருத்தம் செய்யும் அதிகாரம் வரகாபொல பிரதேச சபைக்குச் சொந்தமானதாகும்.

(3) காற்று நிரப்பிய டயர் இல்லாத எந்த வாகனத்தையும் மற்றொரு வாகனத்தில் ஏற்றியன்றி எந்த வீதியிலும் செலுத்துதல் கூடாது.

4. பிரதேச சபைக்குச் சொந்தமான வீதியொன்றில் செலுத்த முடியுமான உச்ச வேக அளவு மணிக்கு 25 கி. மீற்றரைத் தாண்டுதல் கூடாது.

5. (1) எவரேனும் ஒரு நபர் இத்துணைச்சட்டத்தில் இரண்டாம் பிரிவின் மூலம் விளக்கப்பட்டுள்ள வீதியொன்றினால் இத்துணைச்சட்டத்தின் (1) மூன்றாம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பொருளொன்றினை, இயந்திரங்கள் அல்லது உபகரணமொன்றினை போக்குவரத்து செய்வதாக இருந்தால் அதற்காக எழுத்துமூலமான வேண்டுகோலொன்றினை சபையின் தலைவருக்கு குறைந்தபட்சம் 03 நாளைக்கு முன்பாவது ஒப்படைத்தல் வேண்டும்.

(2) மேலே 5 (1) உப பிரிவின்படி வேண்டுகோள் ஒன்று கிடைத்தால் தலைவரினால் தொழில்நுட்ப அலுவலர் அல்லது தலைவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஒரு அலுவலரிடம் அறிக்கையொன்றைப் பெற்று குறித்த கட்டணத்தையும் மற்றும் சேதம் ஏற்படக்கூடிய அளவுக்கு ஏற்றவாரான வைப்புப் பணத்தினையும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(3) மேலே 5 (2) உப பிரிவின்படி வைப்புப் பணம் மற்றும் குறித்த கட்டணங்களை அறவிட்டதன் பின் ஒரு ஒப்பந்தத்திற்கு கைச்சாத்திட்டதன் பின் அன்றி சம்பந்தப்பட்ட அனுமதியை வழங்குதல் கூடாது.

(4) மேலே 5(3) உப பிரிவின் படி பெற்றுக்கொள்ளப்பட்ட வைப்புப்பணத்தினை மீளப்பெற்றுக்கொள்ள வேண்டிய பட்சத்தில் முதலில் 10% திணைக்களக் கட்டணமும் பின் சேதம் ஏதும் ஏற்பட்டிருந்தால் அதன் நட்டத்தினையும் மதிப்பிட்டு அறவிடுதல் வேண்டும்.

(5) சேதம் வைப்புப் பணத்தை விடவும் கூடுதலாக இருந்தால் மேலதிகம் பணத்தினையும் செலுத்தும்படி குறித்த நபருக்கு கட்டளையிடுதல் சட்டபூர்வமானதாகும். அவ்வாறு மிகுதிப்பணத்தை செலுத்துவதற்குப் பணிக்கப்பட்டு செலுத்த மறுத்தால் தகுந்த நீதிமன்ற அதிகாரம் கொண்ட நீதிமன்றமொன்றில் வழக்குத் தொடர்ந்து மிகுதிப்பணத்தை அறவிட பிரதேச சபைக்கு அதிகாரம் உண்டு.

(6) 5 (5) உப பிரிவின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் அசாதாரணம் என சபைத் தலைவர் கருதும் சந்தர்ப்பத்தில் அது விடயமாக ஏதேனும் சலுகை வழங்குவதற்கு சபையின் பொதுக்கூட்ட அனுமதியின்கீழ் செயற்படுவதற்கு சபையின் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

6. பிரதேச சபையுடன் அபிவிருத்தி நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்கள் செய்துகொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களினால் தலைவரிடம் வேண்டப்படுகின்ற எழுத்துமூலமான வேண்டுகோள் ஊடாக இங்கு முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களிலிருந்து விலக்குப்பெறலாம்.

7. இத்துணைச்சட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்தினையும் பரிசீலிக்கும் அதிகாரத்தினை பிரதேச சபையின் தலைவர் அல்லது செயலாளர் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட ஏனைய ஒரு அலுவலரினால் செயற்படுத்தல் சட்டபூர்வமானதாகும்.

8. இத்துணைச்சட்டம் சம்பந்தப்பட்ட அனைத்து மீறல்களும் குற்றமாவதுடன் எவரேனும் ஒருவர் தகுந்த அதிகாரம் கொண்ட நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) உப பிரிவில் விதிக்கப்பட்டுள்ள தண்டத்திற்கும் குறித்த மீறலை தொடர்ந்தும் புரிவதாக இருந்தால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) உப பிரிவில் விதிக்கப்பட்டுள்ள மேலதிக தண்டங்களுக்கும் உற்படுதல் வேண்டும்.

9. இத்துணைச்சட்டத்தில் எவையேனும் ஒரு பிரிவில் பொருள் சம்பந்தமாக தெளிவின்மை ஏதும் ஏற்படுமிடத்து இதன் சிங்களப்பிரதி அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் வழுவுடையதாய் இருத்தல் வேண்டும்.

10. இத்துணைச்சட்டத்தில் பிரதேச சபை என வரகாபொல பிரதேச சபையையும், தலைவர் என வரகாபொல பிரதேச சபையின் தலைவரையும், செயலாளர் என வரகாபொல பிரதேச சபையின் செயலாளரையும், ஏனைய அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர் என பிரதேச சபையின் ஏனைய ஒரு அலுவலர், கிராம அலுவலர் பொலிஸ் அலுவலர் போன்றோரையும் குறிக்கும்.

**அட்டவணை - 01**

(i) 1 1/2 கியுபிற்கு மேற்பட்ட மற்றும் 2 கியுப் வரையிலான வாகனம் ஒன்றிற்காக மீளச்செலுத்தக்கூடிய வைப்புப் பணம் ஒரு மாதத்திற்கு ரூபா 2,500 ஒரு முறைக்கு அனுமதிப் பத்திரக்கட்டணம் ரூபா 100.

(ii) 2 கியுபிற்கு மேற்பட்ட மற்றும் 4 கியுப் வரையிலான வாகனம் ஒன்றிற்காக மீளச்செலுத்தக்கூடிய வைப்புப் பணம் ஒரு மாதத்திற்கு ரூபா 3,750 ஒரு முறைக்கு அனுமதிப்பத்திரக்கட்டணம் ரூபா 200.

(iii) 4 கியுபிற்கு மேற்பட்ட மீளச்செலுத்தக்கூடிய வைப்புப் பணம் ஒரு மாதத்திற்கு ரூபா 5,000 ஒரு முறைக்கு அனுமதிப் பத்திரக்கட்டணம் ரூபா 500.

(vi) 1 ஹெக்டயார் அல்லது அதற்கு மேற்பட்ட இறப்பர் காணியில் அல்லது வேறு ஏதேனும் ஒரு காணியில் மரங்களை விறகுக்காக அல்லது வேறு ஏதேனும் ஒரு விடயத்திற்கு போக்குவரத்து செய்யும்போது ரூபா 3,750 மீளச்செலுத்தக்கூடிய வைப்புப் பணமும் ஒரு முறைப் பயணத்திற்கு அனுமதிப்பத்திரக்கட்டணம் ரூபா 100 உம் அறவிடுதல்.

(v) மரப்போக்குவரத்தின் போது ஒரு முறைப் பயணததிற்கு ரூபா 2,500 மீளச்செலுத்தக்கூடிய வைப்புப் பணமும் மீளச்செலுத்தாத ரூபா 500 அனுமதிப்பத்திரக்கட்டணமும்.

(vi) அதிகாரமளிக்கப்பட்ட பிரதேச சபை அலுவலர் ஒருவர் சம்பந்தப்பட்ட பிரிவுக்குப் பொறுப்பான கிராம அலுவலருடன் சென்று பரீட்சித்ததன் பின் குறித்த வாகனத்தின் மூலம் பாதைக்கு எவையேனும் சேதங்கள் ஏற்பட்டிருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டால் வைப்புப் பணத்தினை மீளச்செலுத்தலை பகிஷ்கரிக்கலாம்.

(vii) ஒவ்வொரு பிரதேச சபை வீதியிலும் போக்குவரத்து செய்யக்கூடிய உச்ச நிறையை விதித்தலும் யானைகளின் உதவியுடன் மரங்களை இழுத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது என காட்சிக்கு வைப்பதற்காக அறிவித்தல் பலகைகளை பொருத்தும் அதிகாரமும் வரகாபொல பிரதேச சபையின் தலைவரினுடையதாகும்.

1-538

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.